விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 29 சித்திரை 27 றம்ழான் 11 இதழ் 80
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (10-5-87)

★ பொலிஸாரால் தாக்கப்பட்ட

## கொல்வின் சிகிச்சைக்கு சிங்கப்பூர் பயணம்!

கொழும்பு. சனி.

மேதினத்திலன்று பொலிஸ் தாக்குதலுக்குள்ளான லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரும், இலங்கையின் சிரேஷ்ட அரசியல் தலைவர்களில் ஒருவருமான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, நேற்று சிகிச்சைக்கென சிங்கப்பூர் பயணமானார்.

கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவின் வலது காலருகே பொலிஸாரினால் பிரயோகிக்கப்பட்ட கண்ணீர்ப்புகைக் குண்டொன்று வந்து வெடித்தது. அரசின் தடையை மீறி கூட்டம் நடத்த முற்பட்ட போதே இச்சம்பவம் இடம் பெற்றது.

தொடர்ந்து அக்குண்டின் வாயு வெளியேற்றத்தினால் அவரது கண்பகுதியும் பாதிக்கப்பட்டது.

(12ம் பக்கம் பார்கக)

மூன்று கப்பல்களில்

## கோட்டை முகாமுக்கு பொருட்கள்!

### ஹெலித் தாக்குதலில் மூன்று முஸ்லிம்கள் காயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். கோட்டை இராணுவத்தினருக்கு உணவுப்பொருட்கள், மற்றும் தளபாடங்கள் நேற்று மூன்று கப்பல்களில் கொண்டு வரப்பட்டு மண்டைதீவு முகாமில் இறக்கப்பட்டன. இந்தபொருட்கள் இறக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றதையடுத்து இரு ஹெலிகாப்டர்களும், சீ-பிளேன் ஒன்றும் நேற்றுக்காலை யாழ். நகர ஆகாயப் பிராந்தியத்தில் வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தவண்ணமிருந்தன.

பாஷையூர் கடலில் மண்டைதீவுக்கு அருகேயுள்ள வெளிச்ச வீட்டுக்கு அண்மையில் மூன்று கப்பல்களிலிருந்து இறக்கப்பட்ட

(12-ம் பக்கம் பார்க்க)

யாழ். வந்த

## 125 லொறிகள் மதவாச்சியில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன!

யாழ்ப்பாணம், ஞாயிறு.

கொழும்பிலிருந்து பொருட்களுடன் யாழ்ப்பணம் நோக்கி வந்த நூற்றி இருபத்தைந்து லொறிகள் மதவாச்சியில் தடுத்து வைக்கப் பட்டுள்ளன.

இந்த லொறிகளில் எரிபொருள் நிரப்பும் தாங்கிகள் பெரிதாக இருப்பதையடுத்தே இவை தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அண்மைக்காலங்களில் கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வரும் லொறிகள் பலத்த கெடுபிடிகளுக்கு உள்ளாகி வருகின்

(12 -ம் பக்கம் பார்க்க)

● யாழ். ஆஸ்பத்திரி மூடப்படமாட்டாது ● சமாதான பிராந்தியம் குறித்து

# போராளிகள் கொத்தலாவல சமரச பேச்சுக்கு ஏற்பாடு

(நமது நிருபர் க. குணலிங்கம்

தாக்குதல் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் தவிர்க்கும் வகையில் யாழ்நகரின் சுற்றுடல் பகுதியில் சமாதானப் பிராந்தியமொன்றை ஏற்படுத்தும் பொருட்டு போராளிகளுக்கும், இராணுவத்தரப்பில் காப்டன் கொத்தலாவலவுக்குமிடையே சமரச பேச்சுவார்த்தை ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பேச்சுவார்த்தை நாளை திங்கட்கிழமை இடம்பெறும். யாழ். ஆஸ்பத்திரியை மூடும் அரசின் உத்தரவு தளர்த்தப்பட்டதையடுத்தே இப்பேச்சுக்கும் ஏற்பாடாகியுள்ளது.

யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையை மூடக்கோரும் அரசின் உத்தரவை வாபஸ் பெறச்செய்யும் வகையில் யாழ். அரச அதிபர். யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர், யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் ஆகியோரை உள்ளடக்கிய உயர்மட்டக் குழுவொன்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்தது.

அச்சந்திப்பின்போது யாழ். அரசினர் போதனா வைத்திய

[12-ம் பச்கம் பார்க்க]

## கோட்டையுடன் தொலைபேசி தொடர்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் அரசினர் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் நச்சினார்க்கியனுக்கும், யாழ். கோட்டை இராணுவ முகாமுக்குமிடையே தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யாழ் வைத்தியசாலை குறித்த நிலைமைகளை அறிவிக்கவும், உடனுக்குடன் அவசர விடயங்கள் குறி

(12ம் பக்கம் பாக்கர்)

## உயர்மட்டம் பரிசீலனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஷெல்கள், வேட்டுக்கள் தீர்க்கப்படுவதையடுத்து யாழ் பொலிஸ்நிலைய பொலிசாருக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள், பாதிப்புக்கள் குறித்து கொழும்பில் பொலிஸ் உயர்மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

யாழ். பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் தமிழ் பொலிஸ் ஊழியர்களே கோட்டை முகாம் கெடுபிடிகளில் பெரி

(12-ம் பக்கம் பார்க்க)

## திருத்தம்

[யாழ்ப்பாணம்]

நகரசுத்தித் தொழிலாளி ஒருவரைக் கடுமையாகத் தாக்கிய ஹோட்டல் உரிமையாளர் ஒருவருக்குத் தமிழீழவிடுதலைப் புலிகள் கசையடித் தண்டனை வழங்கினர் என்றும் மேற்படி தகவலை விடுதலைப் புலிகளின் முஸ்லிம் வட்டாரப் பொறுப்பாளர் தெரிவித்தார் என்றும் நேற்றைய 'ஈழநாடு' இதழில் பிரசுரமான செய்தி தவறாகும்.

நகரசுத்தித் தொழிலாளியைத் தாக்கிய ஹோட்டல் உரிமையாளரிடமிருந்து தாக்கப்பட்ட தொழிலாளியின் மருத்துவச் செலவுக்கென அபராதம் மட்டுமே விதிக்கப்பட்டது.

(ஆ-ர்)

## இடமாற்றம்

"காவேரி ரெக்ஸ் சென்ரர்"

இல. 181. நவீனசந்தை. யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் தற்போது நிலவிவரும் சூழ்நிலை காரணமாக வாடிக்கையாளரின் நன்மை கருதி தற்காலிகமாக கீழ்க்காணும் விலாசத்தில் இயங்கிவருகிறது. கலியாண பட்டு பிடவைகளும் அதற்கேற்ற பிளவுஸ்துணிகளும் மற்றும் எல்லா ரக பிடவைத்தினுசுகளும் எம்மிடம் பெற்று கொள்ளலாம்.

"காவேரி ரெக்ஸ் சென்ரர்"

இல. 15, நிக்லஸ் லேன்,

(கச்சேரி பஸ் ஸ்ராண்ட் அருகாமை)

கச்சேரி நல்லூர் றேட்,

யாழ்ப்பாணம்.

[சி 8989]

## 18 தமிழரை வெளியேற்றும் சுவிஸ் முடிவு இடைநிறுத்தம்

பேர்ண் மே-09

சுவிஸ் அரசு சுவிஸில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழரில் 18 பேரை வெளியேற்றும் தனது முடிவைக் காலவரையறையின்றி ஒத்திப் போட்டுள்ளது. தென்னிலங்கையில் நிலைமை தற்போது மோசமாகியுள்ளது என்பதினாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அகதிகள் விவகாரங்களுக்கான ஆணையாளர் பீற்றர் ஆர்பன்ஸ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இந்த 18 பேரில் அரசியல் தஞ்சக கோரிக்கைகளும் சுவிஸ் அரசினால் நிராகரிக்கப்பட்டிருந்தன ஆயினும் கொழும்பு புறக்கோட்டையில் இடம்பெற்ற குண்டுவெடிப்

(12-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் அரசியல் கட்சி மாநாடு நடத்த அரசு முடிவு?

கொழும்பு, சனி.

இலங்கை அரசின் மகாண சபைத் திட்டத்தைச் செயற்படுத்துவது குறித்து ஆராய்வதற்காக அரசியல் கட்சிகளின் மாநாட்டை மீண்டும் கூட்டுவதென இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாக அரசவட்டாரங்களை மேற்கோள்காட்டி 'யூ என். ஐ' செய்திஸ்தாபன அறிக்கை

(12 ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள A. 35 1 ஸ்ரீ 1840 கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- V. S. Yohenderan, 11/5, Mathews Road, Jaffna. [சி-8973]

எங்களிடம் எந்நேரமும் சுப முகூர்த்தங்களுக்கு உரிய பட்டு புடவைகளும் மற்றும் சகல வைபவங்களுக்கேற்ற புடவை வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். கணேசன் ஸ்ரோர்ஸ், இல. 11, கஸ்தூரியர் ஒழுங்கை, கஸ்தூரியர் ரோட், யாழ்ப்பாணம். ஏ-3980

நல்ல நிலையிலுள்ள வெஸ்பா ஸ்கூட்டர், சுப்பர் 150, குளிர் சாதனப்பெட்டி, (Sysil C80) கஸற் றேடியோ விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். க. நரேந்திரன், 66, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். சி-8970

பாவித்த வீட்டுப் பாவனைப் பொருட்கள் தளபாடங்கள், அல்மாரி, கட்டில் மெத்தைகள், பித்தளை சில்வர் பொருட்கள், Baby Cot, மேசைகள், பெல்ஜியம் கண்ணாடிகள், Show Case, கதிரைகள், மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென்பற்றிக் சந்தியருகில். (-சி8938)

திருமண அழைப்பிதழ்களும் திருமண வாழ்த்துமடல்களும், திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து மடல்களும், பிறந்த நாள் வாழ்த்து மடல்களும், சகல விலைகளிலுமான முத்திரைவகைகளும், வான் கடித உறைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள. அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. சி-8001

உதவி ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி, "பொது அறிவும் பொது உளச் சார்பும்" விலை ரூபா 49/50. 1984, 87ல் நடைபெற்ற பரீட்சை வினா - விடைப் பயிற்சிகளையும் உள்ளடக்கியது. பூபாலசிங்கம், சிறீ லங்கா, ஸ்ரீ சுப்பிரமணியம் ஆகிய புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப்பெற அஸ்ரன் பதிப்பகம், 166/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 8878)

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, மானிப்பாய்க்கு அருகாமையில் 2 பரப்புக் காணி கிணற்று பங்குடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- "இந்திரா வாசா", கூழாவடி, ஆனைக்கோட்டை. (ஆனைக்கோட்டை தபால் கந்தோருக்கு அருகாமை) [சி-8992]

யூலை மாதம் நடைபெறவிருக்கும் 6ம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சைகுரிய பயிற்சி நூல். கணிதம்- தமிழ் இரண்டையும் உள்ளடக்கிய 15 பயிற்சிகள். விலை ரூபா 16/90. பூபாலசிங்கம், சிறீ லங்கா, ஸ்ரீ சுப்பிரமணியம் ஆகிய புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு அஸ்ரன் பதிப்பகம், 166/1 ஆஸ்பத்திரி வீதி- யாழ்ப்பாணம். (சி 8877)

கோவில் பூசைப் பொருள்கள், எவர்சில்வர், பித்தளை, அலுமெனியம், செம்பு, வீட்டுப் பாவனைப் பாத்திரங்கள், குத்து விளக்குகள், திருவாசி, கோவில் பட்டுக் குடை, பித்தளை, அலுமெனிய வார்ப்பு வேலைகள், முலாம் பூசுதல் (Plating), (வெற்மின்) கால் நடைக்கான கனி உப்புக் கலவை மற்றும் உங்கள் சகல தேவைகளுக்கும்: புதிய அகம், சிவன் மாளிகை லிமிட்டெட், மாரி அம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி சிவன் அம்மன் கோவிலுக்கு அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [சி-8974]

Indra Aqua Live Fish Garden உயரின வளர்ப்பு மீன்கள் மீண்டும் வரவழைக்கப்பட்டு துரிதமாக விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது. A.C. இராஜக்கோன், 28, மத்திய மேற்கு வீதி, குருநகர், [St. ஜேம்ஸ் ஆண் பாடசாலை அருகாமை வீதி, குருநகர்] [சி 8980]

சில்லாலையில் சகலவசதிகளுடன் கூடிய 10 பரப்புக்காணியில் வீடும், சிங்கர் தையல் மசின், Table Celing மின் விசிறிகள், சிசில் R 60 குளிர் சாதனப்பெட்டி, வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கும்விற்க முடியாத எல்லாப் பொருட்களும் விற்பனைக்கு பாரமெடுக்கப்படும். ஹென்றி, 141, பாங்சோல் வீதி, [சின்னக்கடைக் கருகாமையில்] யாழ்ப்பாணம். சி-9013

## தேவை

வேப்பம்பூ தேவை. தொடர்புகொள்ளவும்: மில்க்வைற் - யாழ்ப்பாணம். [ஏ 3987]


உ

## ருதுசோபன அழைப்பு

அன்புடையீர்!

பிரபவ ஆண்டு சித்திரை மாதம் 28-ம் நாள் (11-5-1987) திங்கட்கிழமை காலை 10 00மணி முதல் 12-00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் குரும்பசிட்டியைச் சேர்ந்த திரு. திருமதி முத்துலிங்கம் சந்திரமணிதேவி தம்பதிகளின்,

செல்வப் புதல்வி

### மு. நிறைஞ்சனா

அவர்கட்கு ருதுசாந்தி செய்ய பெரியோர்கள் நிச்சயித்துள்ளதால் தாங்களும் தங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்துச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[தற்போதைய சூழ்நிலை காரணமாக தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை.

இங்ஙனம்

"பூமனை"
உடுவில் ரோட்,
மருதனுமடம்.

தங்கள் நல்வரவை நாடும்;
திரு. திருமதி முத்துலிங்கம்,
[எ-3988]


## விற்பனைக்கு

இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. ஒரு கோழி 50/- தொடர்புகொள்க. சி. தனராஜா, 50, பருத்தித்துறை வீதி, [விக்டோரியா ரோட், சந்தி], யாழ்ப்பாணம். சி-8808

புறொயிலர் கோழி [சிறியது] பிலிமௌத் கறுப்பு சேவல், விருத்து சேவல் முதலியனவிற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். சி-9008

ஹலால் பைரஹா புறொயிலர் கோழிஇறைச்சி [Bairaha Broiler Chicken] பேரீச்சம் பழம், வளர்ப்பு மீன்உணவு முதலியன விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், 660, கே;கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். சி-9009

Balr ha Farms Hisex பிறவுண் சேவற் குஞ்சுகள் 15ந் திகதி வெள்ளிக்கிழமையும், Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் Hybro புறொயிலர்குஞ்சுகள் 22ந்திகதி வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். சி-9010

அன்னை தமிழ் மலர் பாலன தமிழ் மலர் மழலை தமிழ் அமுதம் மற்றும் சிறுவர்களுக்கான ஆரம்ப நூல்கள் அனைத்தும் விற்பனையாகின்றன. விற்பனையாளர்களுக்கு விஷேச கழிவு வழங்கப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை, [புத்தகக்களஞ்சியம்] 15/2, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். சி-8814

## தேவை

பயிற்றப்பட்ட தாதிகள் தேவை. நேரில் வரவும்: சென்றல் நேசிங் ஹோம், 350, பலாலி வீதி, திருநெல்வேலி. [சி-8977]

விவசாய உத்தியோகத்தர் தேவை. முழு விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். முகவரி:- செயலாளர், ஊற்று நிறுவனம், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [சி-8959]

திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையிலோ அல்லது சுன்னாகம் சந்தைக்கு அருகாமையிலோ புடவை வியாபாரம் செய்வதற்கு தகுந்த ஓர் இடம் உடனடியாகத் தேவை. தொடர்புகளுக்கு B. அரசன், 550/8 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். [தட்டாதெரு சந்திக்கு அண்மையில்) அல்லது அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். சி-8956

## மணப்பந்தல்

எம்மிடம் எல்லாச்சாதி சமயத்திலும் டொக்டர் தொடக்கம் கமக்காரர்வரை மணமக்கள் இருக்கிறார்கள். விண்ணப்பிக்கவும் ஞாயிற்றுக்கிழமையில் நேரில்வரவும் மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். சி-8872

இதோ! எம்மிடத்தில் எல்லாச்சாதி, சமயத்திலும் மணமக்கள் ஜேர்மனி, பிரான்ஸ், கனடா போன்ற வெளிநாடுகளில் ஆண், பெண், இருபாலாரும் இருக்கிறார்கள் தொடர்பு;- மங்களஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். சி 8681

வேளாள குலத்தைச்சேர்ந்த 30 வயதுடைய 6 அடி உயரமான வெளிநாட்டில் உயர் பதவி வகிக்கும் இந்துமத மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகனுக்கு எவ்வித தோஷமும் இல்லை. விண்ணப்பிக்கவும்:- விளம்பர இல. 8932, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி-8932]

## மணப்பந்தல்

வேளாள குலப் பெற்றோர் சொந்தமான அரிசி ஆலையை நடாத்தும் படித்த தமது 28 வயது (அவிட்டம் 3ம் கால்) நிரம்பிய மகனுக்கு ஏற்ற செவ்வாய்க்குற்றமில்லாது நல்ல அழகும், அறிவும், நற்பண்புகளும் உடைய அதே குல மணமகள் எதிர்பார்க்கிறார்கள் வயது 20 - 25ம் இடைப்பட்டவராகவும் சீதனமும் எதிர்பார்க்கப்படும். சாதகக்குறிப்பும், மற்றும் சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும்; விளம்பர இல சி 8901 மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். சி 8901

## சேவை

தரமான றபர்சீல்கள்குறித்த தவணையில் செய்து தரப்படும். யாழ் நகரசபை எல்லையுள் வர்த்தகர்கள் கடித மூலம் ஆடர் அனுப்பலாம். முற்பணம் தேவையில்லை றபர்சீல்களுக்கு ஆடர் சேகரித்துக் கொடுப்பவர்களுக்குத் தகுந்த கமிசன் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும்:- சின்னத்தங்கச்சி மகன், முருகமூர்த்தி கோவிலடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் [சி-8985]

## பயிற்சிகள்

றேடியோ, ரெலிவிசன். வீடியோ டெக் குறைந்த கட்டணத்தில் கூடியநேர செய்முறையுடன் பயிற்சியளிக்கப் படுகின்றது. புதிய பிரிவு ஆரம்பம்:- 16-5-87. விபரங்கட்கு: எலக்ரோ டெக்னிக்கல் இன்ஸ்ரிரியூசன், கல்வளை, சண்டிலிப்பாய். [சி-8975]

### 6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி!



திருமதி
அ. கமலாதேவி B.A.
[அபிவிருத்தி உத்தியோகஸ்தர்]
தோற்றம்: 03-01-1948
மறைவு: 15-04-1981

ஆறுகி விழிததும்ப
ஆறுமல்அழுத எங்கள்
நீறுகும் நெஞ்சங்கள்
நிறைந்தவளே! நீ
பிரிந்து
ஆறுண்டு போனாலும்
அருமிடர்கள்பலகோடி
நூறுக வந்தாலும்
நூறாதாம் உன்நினைவு!
மண்ணுலகில்
வாழ்வென்று
மடிகின்ற காலமெலாம்
புண்ணிய
நற்கொழுந்துன்னை
பூவிட்டுத்
தொழுதிடுவேம்
விண்ணுலகில்
மேன்மையுறும்
விளக்காக நீ ஒளிர்க.

உன்பிரிவால்வாடும் தாயார், சகோதரன், மைத்துனி, சகோதரர்கள், சகோதரிகள், சிறியதந்தையர்கள், சிறியதாய்மார், மாமன்மார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், உறவினர்கள்.
'அக்கா அகம்'
இணுவில். சி-8988

## கல்வி

ஐந்தாம் வகுப்பு [ஆறும் ஆண்டு] புலமைப்பரிசில் பெற, 35 வருடஅனுபவங் கொண்ட ஆசிரியரால் 1987-05-11 திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு வகுப்பு ஆரம்பமாகின்றது. நேரில்விண்ணப்பியுங்கள்அன்புமாலைப்பாடசாலை, 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். சி-8961

G.C E (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரையும் சித்தியெய்தாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 18வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் வீடுகளிற் சென்று நுணுக்கமான முறையில் விசேட சித்திக்கு கற்பிக்கப்படும். மற்றும் (O/L), (A/L) ற்குரிய சகல பாடங்களும் Spoken English, சாஸ்த்திரமாகிய பாடங்களும் பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி 8898)

## வகுப்புக்கள்

இந்தியக் கல்லூரிகளில் 6, 7, 8, 9, 10, 11, 12, B. A., B. Com, M. A, M. Com, B. Sc, M. Sc, M. B. A., Medical, Engineering, Agriculture, Technical கல்லூரிகளில் சேரவிரும்புவோர் தொடர்புகொள்ளவும் ஹரிஹரன் என்டபிறைஸ். 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-8933)

### 31-ம் நாள் நினைவஞ்சலி



திரு. வேலுப்பிள்ளை கந்தப்பு
(Rtd. Deputy Chief Accountant)
மாப்பாணவூரிகாரைநகர்
தாயின் மடியில்:
06 - 06 - 1916
இறைவனடியில்:
10 - 04 - 1987

பப்பா!

அன்புடனே வளர்த்து, அறிவுரைகள் பல நல்கி வாழ்வாங்கு வாழவழி வகுத்தஅன்புத்தந்தையே பாசம் மிக்க பாதுகாவலனே! அறவழி நின்று வளம்பல குவித்தாய் நலம் நிறை வாழ்வு நமக்கெல்லாம் தந்தாய், அன்பே உருவாய் நம் அகமெல்லாம் நிறைந்தாய். தங்களின் அன்பு நினைவுகள் எமக்கு என்றுமே பசுமையாகவே இருக்கும். உங்கள் ஆன்மா இறையடி எய்தி என்றும் சாந்தமாயிருக்க எல்லாம் வல்ல இறைவனைஎன்றும் வேண்டுகின்றோம். அன்னாரின் இறுதிச் சடங்கில் பங்கு கொண்டும் இரங்கற் செய்தி அனுப்பியும் மற்றும் பல உதவிகளையும் செய்து எமது துக்கத்தில் பங்குகொண்டு அனுதாபத்தை தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள்.
மாப்பாணவூரி,
காரைநகர்.
சி-8994

ஈழநாடு வாரமலர்

EELANADU VARA MALAR

# தத்துவ ஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

"உண்மை, ஒரு பாதையற்ற பிரதேசம். எந்தவிதமான ஒரு தாபனமோ அல்லது ஒரு நம்பிக்கையோ எம்மை உண்மையைநோக்கி இட்டுச் செல்ல முடியாது, ஏனெனில் உண்மை எம் உள்ளத்தில்தான் உண்டு. இதை உணர்வதற்கு நாம் சுதந்திர மனிதராக — முழுமையான சுதந்திர மனிதராக — இருக்க வேண்டும்."

மாலைத் தென்றலில் தலை அசைத்து மொட்டவிழும் வெண்மல்லிகை தன்னைச்சுற்றியுள்ள பிரதேசத்தை தன் சுகந்தத்தால் இனிமை ஆக்குகிறது. மென்மை அழகும் தன் தொண்ணூறும் வயதிலும் நேர் கொண்ட நோக்கும் கம்பீர ஆண்மையும் கொண்ட இருபதாம் நூற்றண்டின் சிந்தனையாளர் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி, தன் இதய தடாகத்தில் மொட்டவிழ்ந்து அன்பு மணம் பரப்பும் தன் பூரணத்துவம் பெற்ற ஆளுமையால், வாழ்க்கையை ஒரு பாரமாக்கி போராட்டங்களுக்கு மத்தியில் சிதறித் திணறும் பல்வேறு மக்கள் தொகுதியினரை தன்பால் ஈர்த்து திறந்த உள்ளத்துடன் அவர்களது துன்பத்திற்கு இதமளித்து சிந்தனையை தெளிய வைக்கிறார்.

**இளமைப்பருவம்**

1895 வைகாசி 11ம் திகதி மதனப்பள்ளியில் ஒருதெலுங்கு பிராமணக் குடும்பத்தில் எட்டாவது பிள்ளையாகப் பிறந்த இவரிடம், மிக இளம் வயதிலேயே கூரிய தீட்சண்யம் நிறைந்திருந்தது. படிப்பில்

கிருஷ்ணஜியின் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த சிந்தனை அலைகளையும்மீட்டி அவரை சிந்தித்து தெளிந்த ஒரு முழுமை பெற்ற ஞானி ஆக்கியதென லாம். அவர் தன்னைத்தானே

இருக்கவேண்டும். சிந்தித்துத் தெளிய வேண்டும். எனக்குச் சிஷ்யர்கள் இல்லை. ஏனெனில் குருவாக இருப்பவன் உண்மையை விட்டு விட்டு கீழே கீழே இறங்குகிறான்" என்றார்.

இருவடைய பேச்சு பலருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. இதற்கு அடுத்த ஆண்டு இவர் நட்சத்திரநெறி என்ற அவருக்கெனத் தொடக்கப்பட்டநெறியைஇல்லாமல்செய்ததோடு கொலண்டில் 500ஏக்கரில் அமைத்த அரண்மனையையும், மற்றைய செல்வங்களையும் அவை தன்னைப்பந்திக்கும் எனக்கொண்டு அவற்றை உதறித்தள்ளிவிட்டு ஒரு தனி



மனிதராக உண்மையை நோக்கிச செல்கின்றார்.

இவர் நடந்த பாதையெல்லாம் சிந்தனைப் பூக்கள் மலர்ந்தன நீலவானில் நிற்பயமாய் சிறகு விரித்துப் பறக்

அவ்வளவு அக்கறை கொள்ளாத கிருஷ்ணஜி இயற்கை அழகை மணித்தயாலக் கணக்காகப் பருகிச் சிந்தனையில் மூழ்குவது ஒரு அன்றாட நிகழ்வு முற்போக்குக் கருத்துடைய பிரமசமாசம் ஒரு உலக வழிகாட்டியின் அவதாரத்தை மிக அவதானமாக எதிர் நோக்கி இருந்த காலம் அது. தற்செயலாக அடையார்க் கடற்கரையில்கிருஷ்ணஜியைக் காண நேர்ந்த லீட் பீட்டர் என்னும் பெரியார் அவரைச் சுற்றி வட்டமிட்ட திவ்விய சோதிக்கணையால் கவரப்பட்டு இவர்தான் எம்மை மீட்க வந்த வழிகாட்டி எனக் கொண்டு அன்னிபெசன்ட்அம்மையாரிடம் அவரை அழைத்துச் செல்கிறார்.

கிருஷ்ணஜியின் வாழ்வில் திருப்பு முனையாக அமைந்த இந்நிகழ்வால் பெருந்திரளான செல்வமும், கல்வி நிலையும் புகழும் இவரை வந்து அடைந்தன. அன்னிபெசன்ட் அம்மையார்இவரைஉருவாக்கத்தனது முழுச் செல்வாக்கையும் பயன்படுத்தினர் இவரும் தம்பி நித்தியாவும் மேலைத்தேசம் செல்கின்றனர். அங்கு நித்தியா சுகவீனம் உற்று மரணிக்கிறான். இச்சோக இழப்பு

புரிந்து கொள்கின்றார் அறியாமை, பயம் இவையெல்லாம் கரைந்து போக தன்னைச்சுற்றி எழுப்பப்பட்ட பெரும் செல்வம எனும் கோயில எப்படித் தன்னைப் பந்தித்து நிற்கிறது என்பதை உணருகின்றார் இவருடைய வாழ்வில் ஒரு ஆத்மார்த்தப் புரட்சியை உண்டுபண்ணிய இக்காலத்தைப்பற்றி அதிகம் இவர் பேசுவதில்லை

**துறவு**

1928ம் ஆண்டு 5000த்திற்கும் அதிகமான அவர் சிஷ்யர்கள்' பங்குகொண்ட பிரயாண்டமானகூட்டத்தில் "உண்மை ஒரு பாதையற்ற பிரதேசம். எந்த விதமான ஒரு தாபனமோ அல்லது ஒரு நம்பிக்கையோ எம்மை உண்மையை நோக்கி இட்டுச் செல்லமுடியாது. ஏனெனில் உண்மை எம் உள்ளததில் தான் உண்டு. இதை உணர்வதற்கு நாம் சுதந்திர மனிதராக, முழுமையான சுதந்திர மனிதராக

சகிதேவி கந்தையா

கும் வெண் பறவைபோல் பூரணமான, கட்டுப்பாடற்ற எந்தவொரு கொள்கைப் பிடிப்புமற்ற சுதந்திரமே அவரது இலட்சியமாக இருந்தது. தெய்வீக காருண்யம்கொண்ட கிருஷ்ணமூர்த்தியின் படிகம் போன்ற தோற்றமே பலரது பாரச்சுமையைக் கரைத்தது. அவருடன் உரையாடுவதே உள்ளத்தை தெளியவைத்தது. அவர் பேசக் கேட்டுக் கொண்டிருந்தாலே எம் உள்ளங்களின் மூலைமுடுக்குகள் எல்லாம் சுத்திகரிக்கப்பட்டும்.

**நூல்கள் அமைப்புகள்**

இவருடைய உரையாடல்கள் நூலுருப்பெற்று சிறந்த வெளியீடுகளாக இவரைத் தரிசிக்க முடியா வர்களையும் சிந்திக்கச் செய்கிறது டாக்டர் போம் அவர்களுடன் இவருடைய உரையாடல் 'காலத்தின் முடிவு' இவற்றுள் தனித்து நிற்கிறது ஒலிநாடாக்கள் பல இவருடைய ஆணித்தரமான கருத்துக்களைச் செவிமடுத்து விழிப்புடன் வாழ வகை செய்கிறது.

**கல்வி நோக்கு**

புறொட் வூட் பாக் எனும் அமைப்பு லண்டனில் கிருஷ்ணஜியின் நெறிமுறைக்குஅமைய எழுதப்பட்ட ஒரு பாரிய பண்பாட்டு நிலையமும் பாடசாலையும் கொண்டது. ஆக்குறேவ் ஸ்கூல் கலிபோர்னியா இன்னும் இந்தியாவில் அமைந்த ராஜ்காட் றிசிவலி மட்றாஸ், பம்பாய் நிலையங்கள் எல்லாம் இவருடைய உலகளாவியகல்வி நோக்குக்குச் சான்றுபகர்வன

**சிந்தனை**

கிருஷ்ணஜியின் சிந்தனைத் தத்துவதத்தை அவர் ஒரு உதாரண மூலம் விளக்குகின்றார். ஒருஅறை யன்னல்கள், கதவுகள் எல்லாம் இறுகமூடப்பட்டிருந்தால் அது ஒரு அசுத்தத்தின் இருப்பிடமாகும் வாழுத்

> நாளை
> ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி
> பிறந்த தினம்

தகுந்த இடமாக இருக்க முடியாது யன்னல்களைத் திறந்து அறையைச் சுத்தமாக்கி வைத்திருங்கள். தென்றல் ஜிலு ஜிலு என உள்ளே வரும் மல்லிகை மலரும் நேரம் சுகந்தம் உட்புகும் சூரிய ஒளி வீர் என அறையைத் தடவிச்செல்லும். உங்கள் உள்ளமும் இப்படித்தான். திறந்து வைத்திருங்கள். சம்பிரதாயம் சடங்கு

[10-ம் பக்கம் பார்க்க]

# வீரம் வேட்கும் மறக்குடி மகளிர்

மறக்குடியிற் பிறந்த தமிழ் மகள் ஒருத்தியின் அழகினைக் கண்டு அவள் மீது மையல் கொண்டான் ஒரு காளை. அவன் அரிசில் கிழார் என்னுஞ் சான்றோரை அடைந்து அவளைப் பற்றி அறிய முயன்றான். அவனுக்கு அரிசில்கிழார் கூறுகின்றார்.

''வெற்றி பொருந்திய வேலேந்திய பெருமகனே! அவள் மறக்குடியிலே பிறக்காதவள் எனக்கருதிப் போலும் 'காட்டுக் காக்கையின் சிறகை ஒத்த ஒளி வீசுங்கரிய நிறத்தினள். வயதில் இளையவள். பெரிய தோள்களை உடையவள். இருவாட்சி மலர் மாலை சூடியிருக்கிருள். அவள் யாருடைய மகள்' என மிகுந்த ஆசையோடு கேட்கிறாய்.

நீர்வளம் நிறைந்த மருத நிலத்தில் பசிய சிலையுடைய கொக்கு வாழ்கின்றது. பிளந்த வாயையுடைய அதன் குஞ்சு, மெத்தென்ற சேறு பொருந்திய அடைகரையில் மேய்ந்து உண்ணுகின்றது. அதன் பின்பும் அதனுடைய தாய், ஆரல் மீன் ஈன்ற ஐயவிக் கடுகு போன்ற முட்டையையும் நல்ல இறாமீனின் குஞ்சுகளையும், தன் குஞ்சுக்கு உணவாக ஊட்டுகிறது.

இத்தகைய மருதநில ஊர்களுக்குத் தலைவன் அவளுடைய தந்தை. மன்னரும் அவனிடம் மகட்கொடை வேண்டினர். அவன் அவர்களுக்குத் தன்மகளைக் கொடுக்க மறுத்தான் மகட்கொடை மறுக்கப்பட்ட மன்னர் அவனோடு போரிட்டுட்டு அழிந்தனர்.

அவளுடைய அண்ணன்மார் களத்தில் எருதுகளைத் கட்டி நற்போர் மிதித்துப் பழகியவர்கள். நெற்களத்திற் போலவே போர்க்களத்திலும் உழைக்க வல்லவர்கள்.

தமது வாண்மையால் வெட்டி வீழ்த்திய வீரர்களின் பிணக்குவியல்களாகிய உயர்ந்த நெற்போர்களையானைகளாகிய எருதுகளைக் கொண்டு மிதிப்பவர்கள் தினமும் இத்தொழிலைச் செய்வது அவர்களின் சிறப்பு.

திருமகளும் விரும்பும் பண்புடைய இவள் இன்பம் போர் வல்லார்க்கல்லது மற்றையோர்க்கு உரியதன்று. நீ இதை அறிந்து செய்யவேண்டியதைச் சிந்தித்துச் செய்வாயாக.''

"கானக் காக்கைக் கலிச்சிற
 கேய்க்கும்
மயிலைக் கண்ணிப் பெருந்
 குறுமகள்
ஏனோர் மகள்கொ லிவ
 ளென விதுப்புற்
றென்னொடு வினவும்
 வென்வே னெடுந்தகை
திருநயத்தக்க பண்பினிவ
 ளெலனே
பொருநர்க்கல்லது பிறர்க்கா
 காத்த
பைங்காற் கொக்கின்
 பகுவாய்ப் பிள்ளை.
மென்சேற் றடைகரை
 மேய்ந்துண் டதற்பின்
ஆரலீன்ற வையவி முட்டை
கூர்ந விறவின் பிள்ளை
 யொடு பெறூஉம்

மட்டுவில்

**ஆ. நடராசா**

தண்பணைக் கிழவனிவ
 டந்தையும் வேந்தரும்
பெருஅ மையிற் போமர்
 செய்தலிற்
கழிபிணம் பிறங்குபோ
 பழிகளி றெருதா
வாடக வைகலு முழக்கும்
மாட்சியர் மற்றிவ டன்னை
 மாரே.

[புறம் 342]

பெண்ணைப் பெற்றவன் ஒருவன் அறிவு ஆற்றல் முதலியவற்றால் தம்மை யொத்தவனுக்கு அல்லது தன்னிலும் உயர்ந்தவனுக்கே தன் மகளைக் கொடுக்க விரும்புவான். தமக்கு ஒவ்வாதாரை மணப்பதற்கு மங்கையரும் ஒருப்படார். இது நெடுநாள் வழக்கு.

இளமகள் ஒருத்தியைக் கண்டு அவள் மீது காதல் கொண்ட தலைவன், அயலில் இருக்குஞ் சான்றோரை அணுகி அவளுடைய பெற்றோரின் குடிபபிறப்பையுங் குணவியல்பையு மறிந்து அவளை மகட்கொடையாற் பெற முயல்வது அன்றைய வழக்கம்.

[10ம் பக்கம் பார்க்க

## புன்மையை எதிர்த்துப் பாடும்

சிந்தனை ஒட்டம் மிக்க
 சிறந்த நற்கவிஞர் கூட்டம்
வந்தனை செய்தே உம்மை
 வண்டமிழ் அலங்கல்
 சாத்தும்
சந்தன வாஷம் போன்றே
 சரதமாய் இனிமை
 சொட்டும்
சுந்தரப் பாட்டே யார்க்கும்
 சுகமெலா மளிக்கும்
 என்போம்

தெள்ளிய தமிழில் நல்ல
 தேன்கவி மாரி பெய்யும்
ஒள்ளிய புலவீர் உங்கள்
 ஓர்மமும் வீரம் எல்லாம்
வெள்ளிய குன்றம் போன்றே
 வீறிட்டு நிற்கும் ஆங்கே
அள்ளிய அழகே சாயல்
 அவற்றையார்பேசவல்லார்,

கவிதைகள் புனைய வல்ல
 கவிஞரே எழுந்து வாரீர்
புவிதனில் நடக்கு தீய
 புன்மையை எதிர்த்துப்
 பாடும்
கவியுறத் தெளிந்த நல்ல
 ஆற்றினைப் போன்ற உங்கள்
கவிதையைக்கொண்டேயின்று
 கருதறம் பாடிச் செல்வீர்.

—சிங்கையாழியான்

# 'நோபல்' பரிசை எதிர்பாராதவிதமாக தவறவிட்ட பேராசிரியர் மயில்வாகனம்



## பேராசிரியர் ஒஸ்மன்ட் ஜயரட்ண
(பௌதிகத் துறைத் தலைவர் கொழும்பு பல்கலைக்கழகம்)

பிரிட்டன் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கவென்டிஷ் ஆய்வுகூடம் [Cavendish Laboratory]

பேராசிரியர் பி. எம். எஸ். பிளக்கெட், [Blackett] பௌதிகத் துறையில் ஆய்வொன்றை நடத்தி அதனைப் பூர்த்தியாக்கும் கட்டத்தை நெருக்கிக் கொண்டிருந்தார்.

அச்சமயம் அந்த ஆய்வுக்குத் துணை நின்ற அவரது உதவியாளர் ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு விடுமுறைப் பயணமொன்றை மேற்கொண்டார்.

இத்தருணம் பிளக்கெட்டின் அந்த ஆய்வின் இறுதிக்கட்டத்துக்குச் சொற்பகாலம் துணைபுரிய அமெரிக்கரான அன்டர்ஸன் என்பவர் சேர்ந்து கொண்டார்.

ஆனால் அந்த ஆய்வு சாதாரணமான தொன்றாக அமையவில்லை. அந்த ஆய்வின் கண்டுபிடிப்பு நோபல் பரிசைப் பெறுமளவிற்கு தகுதிபெற்றது.

இதனை அடுத்து பேராசிரியர் பிளக்கெட்டும், அவரது உதவியாளர் அன்டர்ஸனும் நோபல் பரிசைக்கூட்டாகப் பெற்றனர்.

பிளக்கெட்டுடன் சேர்ந்திருந்து இறுதிக்கட்டத்தில் ஐரோப்பியபயணம் மேற்கொண்ட அவரது முன்னைய உதவியாளர் இந்த 'நோபல்' பரிசை தவறவிடும் துரதிர்ஷ்டசாலியானார்.

அந்த உதவியாளர் வேறெவருமல்ல: அவரே இலங்கையில் பௌதிகக்கல்வியின் தந்தை எனப்போற்றப்படும் பேராசிரியர் அமரர் ஏ. டபிள்யூ மயில்வாகனம் அவர்களாவார்.

நோபல் பரிசைஎதிர்பாராத விதமாக இழந்த இந்த மேதை இலங்கையில் பௌதிகத்துறைக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது; ஈடிணையற்றதாகும்.

இன்று இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலுமுள்ள பௌதிகத்துறைத் தலைவர்களும் [Heads of the Physics Departments] சிரேஷ்ட பௌதிகத்துறைப்பேராசிரியர்களும் இவரது மாணவர்களாவர்.

இவர்கள் இலங்கையில் இதுவரை சகல சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான பௌதிகத்துறைப் பட்டதாரிகளை உருவாக்கியுள்ளனர்.

இப்பட்டதாரிகளில் பலர் இலங்கையிலுள்ள முதல்தர கல்லூரிகளிலும் ஏனைய பாடசாலைகளிலும் பௌதிக ஆசிரியர்களாகப் பணிபுரிகின்றனர். இந்த ஆசிரியர்கள் மூலம் பௌதிகக்கல்வியைப் பயிலும் புதிய சந்ததிகள் உருவாகி வருகின்றன.

எனவே இந்தப் படிமுறையான பௌதிகக்கல்வி முறையை நோக்கும்போது பல்கலைக்கழக பௌதிகத் துறைத்தலைவர்களை உருவாக்கிய பேராசிரியர் மயில்வாகனம் அவர்களே இலங்கையில் இக்கல்வித்துறையின் தந்தை என்ற பெருமைக்குரித்தாகின்றார்.

பேராசிரியர் மயில்வாகனமே இலங்கையின் முதலாவது பௌதிகத்துறைப்பேராசிரியராவார். இலங்கைப்பல்கலைக்கழக ஆசிரியப் பிரிவில் 1932ம் ஆண்டு இவர் சேர்ந்தார். தொடர்ந்து இப் பல்கலைக்கழகத்தின் பௌதிகத்துறை தலைவராகவும், பேராசியராகவும் 19°8ம் ஆண்டு இவர் தரமுயர்த்தப்பட்டார். இக்காலப்பகுதியிலிருந்தே இலங்கையில் பௌதிகக்கல்வியின் சகாப்தம் உருவாகியது எனக்குறிப்பிடலாம்.

இதற்கு முன்னர் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில ஆசிய நாட்டவர்களே ஆங்கிலேய நிர்வாகத்தில் இருந்த பல்கலைக்கழங்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்க முடிந்தது.

1942ம் ஆண்டு இலங்கையில் முதலவதாகப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. சேர் ஐவர் ஜென்னிங்ஸ் [Sir Ivor Jennings] இலங்கையின் முதலாவது பல்கலைக்கழக உபவேந்தராவார். இவருடன் பேராசிரியர் மயில்வாகனம் பௌதிகத் துறைத்தலைவராகப் பணிபுரிந்தார்.

பேராசிரியர் மயில்வாகனம் அப்பதவியை வகித்த காலத்தில் மிகவும்கண்டிப்பு நிறைந்தவராக இருந்தார். ஆனால் அக்கண்டிப்பிலும் மாணவர்களைத் தட்டிக்கொடுக்க வேண்டும் என்ற பேரவா நிறைந்திருந்ததைக் காணமுடிந்தது.

பிரிட்டன் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கவென்டிஷ் பௌதிக ஆய்வு கூடம் [Cavendish Laboratory] இதுவே சர்வதேச பௌதிகத்துறை ஆராய்ச்சிக்கூடம் என்று விபரிக்குமளவுக்கு இத்துறை சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் பலரை உருவாக்கியுள்ளது; கண்டுபிடிப்புக்களை வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வுகூடத்தின் 'பொற்காலம்' என வாணிக்கப்பட்ட காலகட்டத்தில் பேராசிரியர் ஏ டபிள்யூ மயில்வாகனம் அவர்கள் இங்கு பணியாற்றியமை இலங்கையர்கள் அனைவருக்கும்பெருமை அளிப்பதொன்றாகும்.

அப்பொற்காலப் பகுதியிலேயே பேராசிரியர் மயில்வாகனம் தமது PhD கல்வியை கவென்டிஷ் ஆய்வுகூடத்தில் மேற்கொண்டார்.

கொக்குறேவ்ற்[Cockcroft], வோல்ட்டன் [Walton] அஸ்ரன் [Aston], மார்ட்டின் ரீல் [Martin Ryle], பி.எம். எஸ். பிளக்கெட் (P.M.S Blackett), பீட்டர் கபிட்ஸா Peter Kapitza [இவர் ஒரு சோவியத் பௌதிகவியலாளர்] போன்ற சர்வதேசப் பௌதிகநிபுணர்கள் பேராசிரியர் மயில்வாகனம் அவர்களுடன் அன்று கவென்டிஷில் இணைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் மயில்வாகனம் அவர்களே இலங்கையின் புவியியல் அமைப்பு மற்றும் சூழல் பௌதிகவியல் என்பவற்றை இலங்கைப் பல்கலைக்கழக கல்வியில் உட்புகுத்தினார்

பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலங்களில் இவரது விரிவுரைகள் கருத்தாழம் நிறைந்தனவாகவும் சுவாரஸ்யமானதாகவும் காணப்படும். அவர் விரிவுரைகளுக்கு வரும்போது குறிப்புத்தாள்களையோ அல்லது விரிவுரைகளைத் தயாரித்துக்கொண்டோ வருவதில்லை.

அனைத்தையும் தமதுமனதில் நிறுத்திக் கச்சிதமாகத் தமது விரிவுரையை மேற்கொள்வார்.

பேராசிரியர் மயில்வாகனம் இளைப்பாறியதையடுத்து அவரது பதவியைத் தொடர்ந்து வகித்தவர்கள் அனைவரும் அவரது மாணாக்கர்களேயாவர்

பேராசிரியர்கள் ரி டி.எஸ். முத்துக்குமாரண, சி. ரி கன்னங்கரா, (கொழும்பு பல்கலைக்கழகம்].

[10- ம் பக்கம் பார்க்க]

# 'கறுப்பின' உரிமை போராட்டத்துக்கு உரமிட்டுள்ள 'வெள்ளைஇன'த்தேர்தல்!

தென்னாபிரிக்காவில் நடந்து முடிந்துள்ள வெள்ளை இனப் பொதுத்தேர்தல் 'பிறிட்டோரியா' [தென்னாபிரிக்க நிர்வாகத்தலைநகர்] அரசின் 'இனவாத'ப் போக்கிற்கு மேலும் உரமூட்டியுள்ளது.

இதேவேளை மறுபுறத்தில் தென்னாபிரிக்காவின் பெரும்பான்மை கறுப்பினத்தவரின் இனவாதத்துக்கெதிரான போராட்டத்திற்கும் இத்தேர்தல் முடிவுகள் மேலும் வலுவூட்டியுள்ளன வென்றே குறிப்பிடவேண்டும்.

1978ம் ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் ஆளுங்கட்சியான 'தேசியக்கட்சி' [National party]யின் தலைவராக திரு. பி. டபிள்யூ போத்தா ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். தென்னாபிரிக்க வெள்ளை இனவாத சிறுபான்மை அரசின் காத்திரமிக்க தலைவராக இவர் விளங்குகின்றார்,

பெரும்பான்மை கறுப்பினத்தவரின் கிளர்ச்சிகள், போராட்டங்கள் தலைதூக்கும்போதெல்லாம் அவற்றை எதுவித அச்சமுமின்றி முறியடிப்பதில் இவர் ஒருகைதேர்ந்த அடக்குமுறையாளரும் கூட.

### முதல் தேர்தல்

1948ம் ஆண்டு தென்னாபிரிக்காவில் முதல் தடவையாக தேர்தல் இடம்பெற்றது. தேசியக்கட்சியே அம் முதல் தேர்தலில் வெற்றிபெற்றது. அன்றிலிருந்தே தென்னாபிரிக்க சிறுபான்மை வெள்ளை இன அரசின் இனவாதக் கொள்கையும் உத்தியோக பூர்வமாக்கப்பட்டது.

தொடர்ந்து இன்றுவரை கடந்த 40 வருடங்களாகத் தேசியக்கட்சி அதன் இனவாதக்கொள்கைக்கு புதுப்புது வடிவங்களைக் கொடுத்து வருகிறதே தவிர மனிதாபிமான அடிப்படையில் அதில் எந்த வித மாற்றங்களையும்கொண்டு வரவில்லை

தேசியக்கட்சியின் இந்தத் தான்தோன்றித்தனமான போக்கே இன்று தென்னாபிரிக்காவில் குழப்பநிலையை நிரந்தரமாக்கி விட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில்வெள்ளை இனத்தவர்கள் கனிப்பொருட் சுரங்கங்களையும் விவசாயப் பண்ணைகளையும் விளை நிலங்களையும் தமது உடமைகளாகக்கொண்டவர்கள். இவற்றில் உழைத்து வாழவே தென்னாபிரிக்காவின் கறுப்பினத்தவர்கள் உரிமை கொண்டுள்ளார்கள். அந்த உழைப்பையும் அதன் மூலம் பெறக்கூடிய பயனையும்கூட நிர்ணயிக்கும் உரிமை வெள்ளை இனத்தவர்களுக்கே உண்டு.

இந்நிலையில் தென்னாபிரிக்க கறுப்பினத்தவர்கள் ஒரு சராசரி தொழிலாளர் தரத்திற்கும் கீழாக அடிமைககள் என்ற ரீதியிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

### விலங்குவேட்டை

ஆபிரிக்கக் கண்டத்தில் ஐரோப்பியர்களினதும் அமெரிக்கர்களினதும் ஊடுருவல்கள் ஆரம்பித்த காலங்களில் மிருகவேட்டை அவர்களிடையே பிரபலம் பெற்றிருந்தது.

அப்போது வேட்டைக்குரிய விலங்கினங்களைத் தேடித் திருந்தும், அவற்றின் வசிப்பிடங்களைச் சூழ்ந்து இயற்கையோடிணைந்த அவற்றின் வாழ்க்கை முறைகளைக் நிலைத்தும், தமக்கு வேண்டிய பகுதிகளிலிருந்து அவற்றை விரட்டி

### உலக அரங்கு

யும் பொழுது போக்கியவர்கள் வெள்ளை இனத்தவர்களாவர்.

விலங்கினங்களை அன்று நடத்திய அதே பாணியிலேயே இன்று தென்னாபிரிக்காவின் கறுப்பின குடிமக்களை பிறிட்டோறியா வெள்ளை இன அரசு நடத்தி வருகின்றது.

தென்னாபிரிக்காவின் குடிமக்களான பெரும்பான்மை கறுப்பினதவர்களுக்கு ஆபிரிக்கக்கண்டத்தின் தெற்கு அந்தமான தென்னாபிரிக்க நிலப் பகுதியில் 13 சதவீதத்தை மட்டுமே வெள்ளை இனஅரசு ஒதுக்கியுள்ளது. இச்சிறிய பிரதேசத்தில்கூட காலத்துக்குக் காலம் கறுப்பினத்தவர்கள் துரத்தியடிக்கப்படுவதும் ஈடி எழுப்பப்படுவதும் சகஜமான நிகழ்ச்சிகளாகும்.

### காலனித்துவ குடியேற்றம்

17ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கு குடியேறிய டச்சுக்காரர்களும் தொடர்ந்து 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குடியேறிய பிரிட்டிஷாரும் இவர்களின் கலப்பிலுருவான ஆபிரிக்கானர்ஸ் [Afrikaner's] என்ற இனமும் தென்னாபிரிக்காவின் செல்வங் கொழிக்கும் வளங்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் இன்றுவரை கொண்டிருப்பதே இந்த இன ஒடுக்குமுறைக்கு முக்கிய காரணமாகும்.

தென்னாபிரிக்காவின் மக்கள் பிரிவினரில் வெள்ளை இனத்தவர்கள் 18 சத வீதத்தினராவர்.

வெள்ளை இன அரசு இன ஒடுக்குமுறையின் மூலம் கறுப்பினத்தவரை முற்றாக தென்னாபிரிக்காவிலிருந்தும் அழித்துவிடலமெனக் கருதியது ஆனல் ஒவ்வொரு இன ஒடுக்கல நடவடிக்கையின் போதும் கறுப்பினத்தவர்கள் உறுதிமிக்க தென்னாபிரிக்கப்

அனந்த்

பிரஜைகளாகினரே தவிர அயல்நாடுகளுக்குத் தப்பிச் செல்லவோ அல்லது வெள்ளையருக்கு அடிபணியவோ முன்வரவில்லை.

### கறுப்பினத் தலைவர்கள்

நெல்சன் மண்டெலா, பிஷப் டெஸ்மன் டுட்டு, ஒலிவர் தம்போ வின்னி மண்டெலா போன்றவர்கள் தென்னாபிரிக்கக் கறுப்பினத்தவர்களின் உரிமைப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தலைவர்களாவார்கள்.

[9-ம் பக்கம் பார்க்க]

## பிரயாண ஒழுங்குகள்

★ London
★ Germany
★ Norway

Passportஐ கொடுத்து உடனே பதிவுசெய்துகொள்ளுங்கள். எங்கள் பிரயாணிகள் வெற்றிகரமாக போய் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

மற்றும் Cleaners, Saudi Arabiaவுக்கு Open Visa, Passport உடன் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

தொடர்புகொள்ளவும்:-

M. Sanmugaratnam,
SIVANKOVILLADY,
SITHANKERNY. (சி-8929)

# தொடர் நவீனம்

இரவின் அமைதியைக் கலைத்தபடி அவளின் விம்மல் எழுந்தது. அவளைத் தேற்ற முடியாதவனாய் சிவபாலன் தவித்துப்போய் நின்றிருந்தான். வானத்தின் அரை நிலவின் குறைஒளியில் விண்மீன்கள் சிதறிக்கிடந்தன. திட்டுத்திட்டாக சமூகக் கறைகளாக விண்ணில் மேகத் திரள்கள் மிதநதன. மாமரத்தின் அடர்த்தி குறைந்த கிளை வெளியூடாக நிலத்தில் படிந்த நிலாவொளியில் அவள் உடல் குலுங்கி அழுவது தெரிந்தது.

''அழாதேயும்...'' என்று அவன் இரந்தான். அவள் விம்மல் நிற்கவில்லை. அவன் மீண்டும் அவளிடம் செஞ்சினன்: ''அழாதிரும், வசந்தி. நான் சொல்வதைக் கேளுமன்.''

மூன்று நீண்ட மாதங்களின் பின்னர் அவர்கள் சந்தித்திருக்கிறார்கள். அம்மன் கோயில் வீதியில், வசந்தியின் சகோதரர்களால் சிவபாலன் தாக்கப்பட்ட பின்னர் அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை. வசந்தியின் கல்வி இடைநடுவில் நிறுத்தப் பட்டது. அவள் வீட்டை விட்டு வெளியில் எக்காரணங் கொண்டும் செல்ல முடியாத கண்காணிப்பு உருவாகியது. அவள் வீட்டுக்குள் சிறைப்பட்டாள்.

இறுதியாக அவள் துணிந்து அனுப்பிய செய்தியின்படி, அடிவளவில் அவளைச் சந்திக்க அவன் நள்ளிரவில் கள்வன் போல வந்திருக்கிறான்.

பிரிவுத்துயரின் வேதனை அவர்களில் தெரிந்தது. அவள் வாடி வதங்கி இருந்தாள். கனவுகளில் ஆழ்ந்திருக்கும் அவள் விழிகளில் உலகின் சோகமெலாம் குடியேறி இருந்தது. தளதளவென ஒளிர்ந்த அவள் உடல் வெயிலில் காய்ந்த மலர்போல வாடிக் கறுத்திருந்தது. விழிகள் குழிவிழுந்து கருவட்டம், படர்ந்திருந்தன.

அவள் அவன் கரத்தைப் பற்றியபடி அழுதாள்.

''என்னால இனியும் இருக்க முடியாது, சிவா. இந்த நரகத்தில் என்னால் இருக்க முடியாது...''

''எனக்கு மட்டும் உம்மைப் பிரிந்திருப்பது சந்தோஷமா, வசந்தி? நான என்ன செய்ய?'' என்று அவன் துயரத்துடன் கேட்டான்.

''என்னை எங்காவது கூட்டிக்கொண்டு போங்கோ.''

அவன் தீயை மிதித்தவன் போலப் பதறிப்போனான.

நீண்ட நேரம் அவனால் எதுவும் பேசமுடியவில்லை. அது சாத்தியம் தானா?


''என்ன பேசாமல் இருக்கிறியள்? சொல்லுங்கோவன், சிவா கெதியில் முடிவெடுங்கோ. எனக்குக் கலியாணம் பேசுகினம் கெதியில் முற்றாக்கிப் போடுவினமாம். எப்படியாவது என்னைக் கட்டிக் கொடுத்து அனுப்பி விடுவதென்று அம்மாவும் அண்ணன்மாரும் பிடிவாதமாக இருக்கினம். எனக்குப் பயமாக இாக்குது உங்களைத் தவிர இன்னொருத்தரோட மட்டும் வாழுவன் எண்டு மட்டும் நினைக்க வேண்டாம்''

''நல்லா யோசிச்சுத்தான் இதைச் சொல்லுறீரா? இந்தக் கிராமத்தில நீர் உயர் சாதியில பிறந்து...''

அவள் வேகமாகக் குறுக்கிட்டாள்:

''அதெல்லாம் தெரிஞ்ச விசயம். எத்தனை தடவை அதையே திருப்பித்திருப்பிச் சொல்லிப்போட்டியள். இந்தக் கிராமத்தில் நானும் நீங்களும் ஒன்றாக வாழ்வதை எங்கட ஆட்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டினம்.''

''இரண்டு பேரையும் வெட்டிப் போடுவினம், வசந்தி. உன்னுடை கதைச்சன் எண்டதுக்காக உம்மடை அண்ணைமார் என்னைக் கோயிலடியில போட்டு அடிச்சினம்.




அதுக்குப்பிறகும் நான்... என்னால உம்மை மறக்க முடியவில்லையே, வசந்தி. இரவும் பகலும் எந்நேரமும் உம் நினைவு தான். எதுவும் என்னால் செய்ய முடியவில்லை. நான் படித்து டொக்டராக வந்து எங்கட சமூகத்திற்குப் பெருமை சேர்ப்பன் எண்டு ஐயா, அம்மா, அண்ணை எல்லாரும் நினைச்சிருக்கினம் அவர்களின்ர கனவுகளை நான் பாழாக்கப் போறன் போலப் படுகுது. என்னால படிக்க முடியவில்லை. உறங்க முடியவில்லை.''

''சிவா...'' என்று அவள் விம்மினள்.

''பெரிய வீட்டுப் பொன்னம்மாவின் மகளைக் கேவலம் சுப்பனின் மோன் அதுவும்...'' தொடர்ந்து கூற முடியாமல் அவன் கண்கள் கலங்கக் குரல் தத்தளித்தது. ''ஏன்

[17]

இப்படிச் சாதியென்ற பெயரால் எங்களை இந்தச் சமூகம் பிரிக்கப்பாக்குதோ''

''எங்காயினும் கண்காணாத இடத்திற்கு ஓடிவிடுவம், சிவா.''

''அது ஒருக்காலும் முடியாது, வசந்தி. என்னால உன்னை வைச்சுக் காப்பாற்ற முடியுமா? செல்லமாகச் சகல சுகங்களுடன் வாழ்ந்த உமக்கு நீர் இப்ப வாழ்கிற வாழ்க்கையின் ஒரு சிறு அம்சத்தையாவது தர முடியும? உமக்கு வயிறார ஒருவேளை சோறு போடத்தான் என்னால முடியுமா?''

''அப்ப...?'' அவள் ஏக்கத்துடன் கேட்டாள்.

அவன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். அரை நிலவைக் கருமேகத்திரள் ஒன்று மெதுவாக மறைக்கத் தொடங்கியது.

''என் படிப்பு முடியும் வரை நீர் காத்திருக்க வேண்டும்.''

''நான் காத்திருப்பன் சிவா. என் உயிர் உள்ள வரை உங்களுக்காக நான் காத்திருப்பன். ஆனா, எனக்குக் கலியாணம் பேசுகினம். இன்றோ நாளையோ... ஒரு மாதித்திலோ... சிவா அந்தக்கொடுமையை எப்படி நான் பொறுத்துக்கொள்வன்.''

அவன் எதுவும் பேசவில்லை. மௌனமாகத் தலைகுனிந்து நின்றிருந்தான். வலக்கரத்தால் மாமரத்தின் கிளையொன்றைப் பற்றியவாறு அவன் துவண்டு நின்றிருந்தான்.

''உங்களுக்குத் துணிச்சலில்லை...'' என்றாள் அவள்.

அவன் அவளை வியப்புடன் கவலையுடனும் ஏறிட்டுப் பார்த்தான்.

''மெய்தான் வசந்தி, எனக்குத் துணிச்சல் இல்லைத்தான். நானும் உங்கள் சாதிக்காரனாக இருந்திருந்தால் சில வேளை துணிச்சல் வந்திருக்கும்.''

''நீங்கள் அதை ஒரு சாட்டாகப் பார்க்கிறியள்.''

''அப்படியில்லை. உணர்ச்சி பூர்வமாகச் சிந்திக்காது அறிவு பூர்வமாக யோசித்தால், எதுவித தொழிலுமில்லாத என்னால் உம்மை அழைத்துச் சென்று காப்பாற்றமுடியுமா? சமூகத்தை வெறுத்து ஒதுக்கி விட்டு உம்மைக் கண்கலங்காமல் வைச்சிருக்கத்தான் முடியுமா?''

அப்ப ஏன் என்னைக் காதலிச்சியள்?''

''எனக்கு இதற்கு விடை தெரியவில்லை, வசந்தி.''

''நீங்கள் என்னை ஏமாத்தப் பார்க்கிறியள்''

''அப்படியில்லை, வசந்தி.''

''அப்ப எப்படி? இன்னொருத்தனைக் கட்டிக் கொண்டு வாழ என்கிறியளா?''

''எங்கட ரெண்டு பேருடைய வாழ்க்கைக்காக எத்தனை பேரினர வாழ்க்கையை நாசமாக்க வேண்டுமா.''

''என்ன சொல்லிறியள்?''

''நீர் என்னோட ஓடி வந்திட்டால் உம் அம்மா நிச்சயமாக உசிரோட இருக்க மாட்டா. கடைசி, சாதிப் பெருமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காயினும் தற்கொலை செய்து கொள்வா. உமக்கு தங்கச்சி ஒருத்தி இருக்கிறா அதன எதிர்காலம் என்னவாகும்' எனக்கு ரெண்டு தங்கச்சி மார் இருக்கினம். கலியாணமாகத ஒரு அண்ணன் இருக்கிறான். இவ்வளவையும் யோசித்தால், கலியாணம் செய்யிற வயதில்லை எங்களுக்கு வசந்தி, உபமை என உயிருக்கு மேலாக நான் காதலிக்கிறன். நீரில்லாமல் நானில்லை ஆனா, இன்னமும் சில வருடங்கள் காத்திரும். தகுதியோட வந்து உபமை நான் கட்டிக்கொள்ளுறன்.''

அவள் தன் விழிகளை அழுத்தித்துடைத்துக் கொண்டாள்.

''அதுதான் உங்க முடிவா, சிவா?''

அவன் எதுவும் பேசாது அவளை ஆழமாகப் பார்த்தான. அவன் கரப்பிடியியிலிருந்து தன் கரங்களை அவள் விடுவித்துக் கொண்டாள்.

''உங்க முடிவு அதெண்டா நான் என் முடிவையும் சொல்லுறன்...''

''வசந்தி நீர் என்ன சொல்வீர் எண்டு எனக்குத் தெரியும். அப்படி ஒண்டும் சொல்லிவிடாதேயும்.''

அவள் துயரத்துடன் புன்னகைத்தாள்.

''அம்மாவின் கண்ணீரையும் அண்ணன்மாரின் கண்டிப்பையும் மீறி என்னால், உங்களுக்காகக் காத்திருக்க முடியும் எண்டு நினைக்கிறியள். அது முடியாது. அவற்றிலிருந்துவிடுபட எனக்கு இரண்டு மார்க்கம் தான் இருக்குது.''

''சொல்லும் வசந்தி...'' என்று அவன் துடித்தான்.

''ஒன்று நீங்க இப்ப என்னை உங்களுடன் கூட்டிப் போவது. அதுதான் சாத்தியமில்லை என்று தெரிஞ்சு போச்சுது. மற்றது...' அவள் விம்மியபடி தொடர்ந்தாள்:

''இந்த உலகத்தை விட்டே செல்வது...''

''வசந்தி...?'' என அவன் வீரிட்டான் அடி வயிற்றிலிருந்து பூகம்பம் கிளம்புமா?

''எனக்கு வாழத்தான் விருப்பம் சிவா. ஆனா, சாவதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை, நீங்க எங்கிருந்தாலும் நல்லா இருக்க வேணும்.''

அவன் அவளை அப்படியே வாரி இழுத்துத் தன்னுடன் அணைத்துகொண்டான்.

அவன் மார்பில் முகம் புதைத்து அவள் விம்மி விம்மிஅழுதாள். அவன் சேர்ட் அவள் கண்ணீரால் நனையத் தொடங்கியது.

அவர்கள் அப்படியே எவ்வளவு நேரம் இருந்தார்களோ தெரியாது. பெரியவீட்டின் பின் பக்க 'லையிற்' பிரகாசமாக எரிந்தபோது அவள் விழித்துக் கொண்டாள்.

''சிவா கெதியாகப் போயிடுங்க. அம்மா எழும்பியிட்டா போல...''

''வசந்தி...'' என்று திடுக்கிட்டு நின்றான் அவன்.

''கெதியாகப் போங்கப்ளீஸ் கெதியாப் போங்க...''

அவள் அவன் பிடியிலிருந்து விடுபட்டு வீட்டை நோக்கி ஓடத்தொடங்கினாள்.

அவன் நின்றவிடத்தை விட்டு நகரவில்லை. அவள் வீட்டிற்குள் சென்று மறையும் வரை பார்த்தபடி நின்றிருந்தான். வீட்டின் விளக்குகள் பல எரிந்தன,

வசந்தி அகப்பட்டுக்சொண்டாளோ?

யாரோ 'ரோச் லைற்' ஒன்றுடன் அடிவளவுப் பக்கம் வருவது தெரிந்தது. அவன் மெதுவாக அவ்விடத்தைவிட்டு அகன்று வீதியில் ஏறிக்கொண்டான். கால்கள் தள்ளாடின. விழிகள் குளமாகித் தவித்தன. இதயத்தில் பிரளய அலைகள் எழுந்து ஆராவரித்தன.

''வசந்தி... என் உயிரே...'' அவன் இதயம் அழுதது.

ஆலடி வயிரவர் கோயில் நெருங்கியது நள்ளிரவின் பிடியில் கிராமம் ஆழ்ந்திருந்தது. அவன் கோயிலின் வெளிமண்டபத்தில்அமர்ந்துகொண்டான். வீதியில் அலைந்த நாயொன்று அவனைப் பார்த்து உறுமியது.

ஆலமரத்தின் கீழ் கட்டப்பட்டிருந்த சனசமூக நிலையம் இருளில் மூழ்கிக் கிடந்தது

அவளோடு பழகிய இனிய நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாக

[10ம் பக்கம் பார்க்க]

## நல்லருள் புரிகின்ற நயினைவாழ் அன்னை

நல்லவர் வாழ்கின்ற நயினைப் பெரும்பதியில்
நாகபூஷணிக்கு மடியேன்
சொல் நிறைந்த செந்தமிழாற் சோதியுரு சுந்தரிக்குத்
தூயபா மாலை சூட்ட
கல்லான நெஞ்சமும் கருணையற் கசிந்துருகிக்
காலடி யிலாருகவே
நால்வேத ஓசையுன் நனைந்துமே குளிராக
நல்குதி நயினை யம்மே.

பவளமொ டிரத்தினம் வைடூரிய மொளிரும்
பராபரைய ன உமையாள்
தவளமுயர் சோமே தகந் தவழு மாலையுந்
தண்டையுஞ் சிலம்பு மலையக்
கவளமுண் சையறும் கதிர் ரவு வேலறுங்
கரங்களினிரு மருங்கும்
திவளப் பரமசிவன் திருவிளை பாடல்காண்
தேவியே நயினை யம்மே.

மஞ்சட் பனிநீரிலாடிக் குளிக்கும் மரகத
வல்லி மண்புக ழென்
நெஞ்சத் தலர நீடுநினைந்து நெக்குருகி
நின் நாமஞ் சொல்ல
கொஞ்சுஞ் சிலம்பு தண்டையின் நாதமும்
கலந்துன் திருவடிகாணப்
பஞ்சத் தடத்துள் விளையாடுஅப் பழுத்த பழம்
இறைஞ்சிக் கிடக்கருள் நயினையம்மே.

கஞ்சத் தவிசேறி நாகவடம் பூண்டு
கொஞ்சுங் கடல் முனையிலே
தஞ்சங் கிடப்பார்க்குப் பஞ்சம் பிணியகற்றித்
தாங்குந் தயா நிதியே
மஞ்சுபடி யளக்க மாரிப்புனல் பொழுவும்
மஞ்சுத் திருவடி யென்
நெஞ்சில் நிறைமதிபால் நிறைய நிலவளிக்கும்
நீலாட்சி நயினை யம்மே.

சி. நா. கணேசனார்

# ஈழத்துத் தமிழ்க்கவிதை வளமும் வரலாறும்—18

## மகாகவியும் யதார்த்தநெறிக் கவிதையும்

### II

மஹாகவியின் மேற்படி கவிதையாக்கங்கள் பலவற்றிற்கு அடிநாதமாக அமைந்த உணர்வுநிலை, சமகாலஉணர்வு, சமூக உணர்வு, ஆழ்ந்த மனித நேயம் என்பனவாகும். தனது மண், அதன் சமூக-பண்பாட்டு அம்சங்கள். அங்கு வாழும் தொழிலாளர். விவசாயிகள், சலைஞர் முதலியோரது முயற்சித் திறன் மீதிருந்த ஈடுபாடும் ஏழைகள் பாதிக்கப்பட்ட மக்கள், நடுத்தர வர்க்கத்தினர் என்போர்மீது கொண்டிருந்த அநுதாபமும் அவர்களின் அந்நிலைக்குக் காரணமான சமூகமுரண்பாடுகள் மீதிலான வெறுப்புமே அவரது பல்வேறு கவிதையாக்கங்களிலும் புலப்பட்டு நிற்கின்றன. இவற்றைப் புலப்படுத்தும் வகையிலான அவரின் அணுகு முறையினை எம். ஏ. நுஃமான் அவர்கள் யதார்த்தமெனச் சுட்டுகிறார். மஹாகவி கையாண்ட யதார்த்தத்திற்கு நுஃமான் தரும் விளக்கம் வருமாறு:

"...மகாகவி புனைகதைக்குரிய யதார்த்தத்தைக் கவிதைக்குக் கொண்டுவந்தவர். அவரது யதார்த்தம் கருத்து ரீதியானதுஅல்ல காட்சி ரீதியானது (Visual). சாதாரண மக்களின் வாழ்க்கை அநுபவங்களை நாவல், சிறுகதைகள் உரைநடையில் சித்தரிப்பது போல் மஹாகவி செய்யுள் நடையில சித்தரித்துள்ளார். இப்பண்பு அவரது தனிக் கவிதைகளில் சிதறலாகவும் காவியங்களிலும் பா நாடகங்களிலும் முழுமையாகவும் காணப்படுகின்றது. இவ்வகையில் அவர் காலத்துக் கவிஞர்களிலிருந்து மஹாகவி தனித்துத் துலங்குகிறார்.

மஹாகவின் யதார்த்தம் அவர் கையாண்ட கவிப்பொருளின் ஊடாக வெளிவருகின்றது. கிராமப்புறத்து விவசாயிகள், நகர்ப்புற வாழக்கைக்குப் பலியான ஏழைகள், மத்தியதர வர்க்கத்தினர் போன்ற சாதாரணமக்களின் வாழ்க்கை மீதே மஹாகவியின் பார்வை விழுந்திருப்பதை அவரது படைப்புக்கள் காட்டுகின்றன. பொதுவாக 1955க்குப் பிந்திய மஹாகவியின் பெரும்பாலான படைப்புக்களில் சாதாரணமக்களின் வாழ்க்கை நிலை, சமூக முரண்பாடுகள். அவற்றின் விளைவான மனித நடத்தை முதலியனவே சித்திரிக்கப்பட்டுளளன"

மேற்குறித்த சமகால சமூக மனிலநேப உணர்வு நிலைகள் மேற்படி யதார்த்த அணுகுமுறை என்பவற்றுக்குச் சான்றுகளாக வுள்ள பல தனிக்கவிதைகளிற் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

மப்பன்றிக் காலமழை
கணுத மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய்
விளையாது
ஏர் ஏருது காளை இழுக்காது
எனினும் அந்தப்
பாறைபிளந்து பயன்
விளைப்பான் என் ஊரான்
ஆழத்து நீருக் ககழ்வான்
அவன் நாற்று
வாழத் தன் ஆவி
வழங்குவான் ஆதலால்
பொங்கி வளர்ந்து
பொலிந்தது பார்
நன்னெல்லு

●

வாடும் வயலுக்கு வார்க்கா
முகில் கதிர்கள்
சூடும் சிறுபயிர் மேல் சோ
என்று நள்ளிரவிற்
கொட்டும்உடன் கூடும்
கொலைக்காற்றும் தானுமாய்
எட்டுத் திசையும் நடுங்க
முழங்கி எழும்
ஆட்டத்து மங்கையர் போல்
அங்குமொய்த்து நின்றபயிர்
பாட்டத்தில் வீழ்ந்தழிந்து
பாழாகிப் போய்விடவே
கொள்ளைபோல் வந்த
கொடுமை விளைவித்து
வெள்ளம்வயலை விழுங்கிற்று
பின்னர் அது
வற்றியதும் ஓயா வலக்
சரத்தில் மண்வெட்டி
பற்றி அதோபார்பழையபடி
கிண்டுகிறான்
சேர்ந்தவற்றை முற்றும்
சிதறவைக்கும்வானத்தைப்
பார்த்தயர்ந்து நிற்கும்
பழக்கமற்றோன் வாழி அவன்
ஈண்டு முதலில் இருந்தும்
முன்னேறுதற்கு
மீண்டும்தொடங்கும்மிடுக்கு.

வரண்ட பிரதேசமான யாழ்ப்பாண மண்ணை வளம்படுத்தி நிற்கும் விவசாயின் முயல்திறனை- இயற்கையால் அழிவுநேரினும் சோர்வறியாது மீண்டும் தொடங்கு மிடுக்கை வாழ்த்துவதாக இக்கவிதை அமைகிறது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் முக்கிய சமூகக் குறைபாடானசாதிஏற்றத் தாழ்வு தொடர்பான ஆலயப் பிரவேசப் பிரச்னையினடியாக எழுந்தது 'தேடும் திங்களும்' என்ற பின்வரும் கவிதை;

''ஊரெல்லாம் கூடி ஒரு
தேர் இழுக்கிறதே;
வாருங்கள் நாமும்
பிடிப்போம் வடத்தை''
என்று
வந்தான் ஒருவன்
வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்து நூறாண்டு
வாழ்வதற்காய்ப்
பெற்றமகனே அவனும்
பெருந்தோளும்
கைகளும கண்ணில் ஒளியும்
கவலையிடை
உய்யவிழையும் உளமும்
உடையவன்தான்
வந்தான் அவன்ஓர் இளைஞன்
மனிதன்தான்
சிந்தனையாம் ஆற்றற் சிறகு
தைத்து வானத்தே
முந்தநாள் ஏறி முழு
மதியைத் தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி
'ஈண்டுநாம் எல்லோரும்
இசைந்தொன்றிநின்றிடுதல்
வேண்டும்''
எனும்ஓர்இனிய விருப்போடு
வந்தான் குனிந்து வணங்கி
வடம் பிடிக்க
''நில்'' என்றான் ஓராள்
' நிறுத்து'' என்றான்
மற்றோராள்
''புல்'' என்றான் ஓராள்
''புலை'' என்றான்
இன்னோராள்
''கொல்'' என்றான் ஓராள்
''கொழுத்து'' என்றான்
வேறோராள்
கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு
பல்லோடு உதடு பறந்து
சிதறுண்டு
சில்லென்று செந்நீர்
தெறித்து
நிலம் சிவந்து
மல்லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்
ஊரெல்லாம் கூடி இழுக்க
உகந்ததேர்
வேர்கொண்டது போல
வெடுக்கென்று நின்றுவிடப்
பாரெல்லாம் அன்று
படைத்தளித்த அன்னையோ
உட்கார்ந்திருந்து விட்டாள்
ஊமையாய்த்தான்பெற்ற
மக்களுடைய மதத்தினைக்
கண்டபடி
முந்தநாள் வான முழு
நிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்
அதோ மண்ணில்
புரள்கிறது.

மதத்தின் பெயரால் நிகழும் தீண்டாமைக் கொடுமையின் கட்புலக்காட்சியாக விரியும் இக்கவிதையின் ஊடாக சமூக முரண்பாடுகள் மீதான தனது வெறுப்புணர்வையும் அகன்ற மனித நேயத்தையும் புலப்படுத்திவிடுகிறார் மகாஹவி.

தனிக்கவிதைகளில் வெளிப்படும் மேற்படி உணர்வுநிலை சித்திரிப்புத்திறன் என்பவற்றின் விரிந்த நிலைகளையே பாநாடகங்கள், காவியங்கள், வில்லிசைப்பாடல் என்பன புலப்படுத்தி நிற்கின்றன. யாழ்ப்பாணப் பிரதேச மீனவர் சமூகத்தின் வாழ்க்கைப் பிரச்னைகள் 'புதியதொருவீடு' பாநாடகமாக உருப்பெற்றது. கடலுக்குச் சென்ற கணவன் மீளாதநிலையில் அவன் இறந்துவிட்டான் எனக்கருதி சமூகம் மனைவிக்கு வேறொருவனை துணைவனுக்குவதும் இறவாது மீண்டகணவன் எய்தும் மனப் போராட்டங்களுமே நாடகமாகவிரிகின்றன இதிலே அம் மீனவசமூகத்தின் முயற்சித்திறன் இயற்கையோடு போராட வேண்டிய அவலநிலை என்பன நயம்பட உணர்த்தப்பட்டுள்ளன. அவ்வகையில் அமையும் கவிதைகளிற் சில:

சிறுநண்டு மணல் மீது பட
மொன்று கீறும்
சிலவேளை அதை வந்து
கடல்கொண்டு போகும்
கறிசோறு பொதியோடு
தருகின்ற போதும்
கடல்மீதில் இவள்கொண்ட
பயமொன்று சாணும்.

கோடை கொடும்பனி
மழைகுளிரை அஞ்சிக்
கோடிப்புறத்தினில் உறங்கி
விடலாமோ
ஆடை களைந்துதலைமீதினில்
அணிந்தோம்
ஆழக் கடல்தயிர் எனக்
கடைய வந்தோம்.

[தொடரும்]

### கலாநிதி நா. சுப்பிரமணியன்

---



# சிறுவர் மஞ்சரி

தொகுப்பு: எஸ். கே. ஏ. ஆனந்தன்

## தெரிந்து கொள்ளுங்கள்

### அறுசுவை உணவும் பயனும்

[1] கார உணவு: இது உடலுக்கு வெப்பந்தரும்.

[2] கசப்பு உணவு; இது அழுக்கை அகற்றிச் சக்தியைத் தரும்.

[3] இனிப்பு உணவு: இது உடலின் தசையின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

[4] புளிப்பு உணவு: இது இரத்தத்தில் அழுக்கைநீக்கும்.

[5] துவர்ப்பு உணவு. இது இரத்தத்தைப் பேணுகின்றது.

[6] உவர்ப்புஉணவு(உப்பு); இது நினைவு ஆற்றலை உண்டாக்க உதவுவது.

தொகுப்பு:
பா. ராதிகா
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

★

### யார். . . யார். . ?

பரிணாமக் கொள்கையினை வகுத்த விஞ்ஞானி யார்?

★ சார்ல்ஸ் டார்வின்

செஞ்சிலுவைச் சங்கத்தைத் தோற்றியவர் யார்?

★ ஹன்றி டுனன்ட்

அமெரிக்க ஐக்கிய அரசின் 37வது ஜனாதிபதி யார்?

★ றிச்சார்ட் எட்வேர்ட் நிக்ஸன்

நியூபவுன்லாந்தைக் கண்டு பிடித்தவர் யார்?

★ காபோட்

கரும்சட்டைப் படையினை உருவாக்கியவர் யார்? எதற்காக?

★ கரிபால்டி [1807-1883] இத்தாலி நாட்டின் சுதந்திரத்திற்காக.

உலகப் புகழ் பெற்ற 'மோனலீசா' என்னும் அழகிய பெண் ஓவியத்தை வரைந்தவர் யார்?

★ லியனடோ டாவின்சி.

தொகுப்பு.
ச நேசமலர்
யாழ். இளையதம்பி தமிழ் கலவன் வித்தியாலயம்.

★

### நித்திரையின் பயன்

நோளாளிகள் நித்திரைசெய்யும்போது குழப்பக்கூடாது என்று சொல்கிறார்களே ஏன் தெரியுமா?

விழித்திருக்கும் சமயத்தை விட நித்திரை கொள்ளும் போது உடம்பு அதிக நன்மை அடைகின்றதாம். நித்திரைசெய்யும்போது செல் பிரிவும் புரோட்டீன் இணைப்பாக்கமும் உச்சநிலையை அடைகின்றன என்றும் விழித்திருக்கும் போது இச்செயற்பாடு நடைபெறவில்லையென்றும் ஸ்கொட்லாந்து தேசத்து ராயல் எடின்பரோ மருத்துவமனை ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர்.

ஆகவே நித்திரையிலிருக்கும் நோயாளியைக் குழப்பாதீர்கள்.

தகவல்:
தி. அருள்மொழித்தேவர்
யாழ். இந்துக்கல்லூரி.

### எருத்துவாலன் பறவை

நாளும் நாம் காணும் நாகணவாய் பறவையைப போன்ற கொண்டைக் கரிச்சான் என்னும் வால்நீண்ட பறவையே எருத்துவாலன் என்ற குருவி காச்சான் இனப் பறவையான எருத்துவாலன் தலையில் குஞ்சம் போன்ற கொண்டை காணப்படும். கருமையான பளபளப்பும் சிறிது நீலநிறமும் கொண்டது. அதன் வாலில் இரண்டு இறகுகள் மட்டும் 15 அங்குலம் வரைநீண்டிருக்கும். இந்த இரண்டு இறகுகளும் எருதின வாலை ஒத்திருப்பதால் இப்பறவைக்கு எருத்துவாலன் என்றுபெயரை ஏற்படுத்தியுள்ளது.

இப்பறவையினம் இந்தியா, இலங்கை,பர்மா, தாய்லாந்து, மலேஷியா, அந்தமான்தீவுகளில் பசுமையான காடுகளிலும் மலை அடிவாரங்களிலும் தேக்கு மூங்கில் மரங்கள் வளரும் பகுதிகளிலும் வாழுகின்றன மெல்லிய கொம்பு, புல், நார்களால் கிண்ணம்போல் கூடமைத்தும் இக்கூடு தொட்டில் போல் அசையும் வகையில் அமைத்துக் குடியிருக்கும். எருத்துவாலன் பறவைகள் சீட்டிஅடிப்பதுபோல் சத்தமிடுகின்றன அதேவேளை பிற பறவைகளைப்போல் சத்தமிட்டும் நடிக்கின்றன. இப் பறவை இனத்திற்கு உயிரியல் விஞ்ஞானப் பெயர் திசெமூரஸ் பரதீசியஸ் என்பதாகும்.

## விடுகதை விடுவோமா?

1 செக்கச் சிவந்த உடம்பு தலையிலே வால் முளைத்திருக்கும். இளமையில் பச்சைநிற உடம்பு. முதிர்ந்துவிட்டால் சந்தைக்கு வந்திடும் அதுயார்?

2 குருவி இருக்க முடியாத மரங்களிலே கொத்துக் கொத்தாய் காய்கள் காய்ந்துவிட்டால் கறுப்புப்பிட்டாகவாயில் ருசிப்பர் அவர் யார்?

3 பூக்கார் காய்ப்பார்; கலகலப்பார் காகம் வந்திருக்கக் கொட்பில்லை. தெரியுமா?

4 கிண்ணம் போல் பூப் பூத்துக் கிடாரம்போல் காய் காய்க்கும். அது என்ன?

5 கொடியோ கோணல் மாணல். இலையோ தாறுமாறு. பூவோ மஞ்சள். காயோ கசப்பு அது என்ன?

விடைகள்

1. செத்தல் மிளகாய்.
2. குரக்கன்.
3. நெல்.
4. பூசனிக்காய்.
5. பாவற்காய்

—து. சதீஸ்குமார்
கோண்டாவில் கிழக்கு.

## விந்தை உலகு

### எலி

விரைவும் உற்சாகமும்உள்ள சிறு பிராணி இனத்தைச் சேர்ந்ததே எலிகள். அமெரிக்கா கண்டம் தவிர்ந்த உலகின் ஏனைய பகுதிகளில் 105 வகையான எலிகள் கண்டறியப்பட்டுள்ளன இவை இரவில் இரைதேடிக் கொள்கின்றன. தரையின்கீழ் குழிகள் அமைத்துக் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. எலிகளின் வாயிலுள்ள வெட்டுப் பற்கள் மூலமாக பொருள்களைச் சுரணடி உண்ணுகின்றன.

நமதுவீடுகளில்சாதாரணமாக காணப்படும் அவை வீட்டெலிகளில் இரண்டு வகை உண்டு; கபில நிறமான பெரிய எலிகள், கருமையான சிறிய எலிகள் இவை தவிர புற்றுக்களில் வழும் வெள்ளைநிற எலிகள், பெருச்சாளி, சுண்டெலி, மூஞ்சூறு என்பனவும் நாம் சாதாரணமாகக் காணக்கூடிய எலிகளாகும்.

நரி நாய், காகம், ஆந்தை என்பன எலிகளின் பரம எதிரிகளாகும். இவைகளால் எலிகள் அழிக்கப் டாது போனால் நம் உயிர்வாழ்வதற்கான உணவுவகை எலிகளால் பெருமளவிற்குச் சேதமுற்றுவிடும் உலகநாடுகள் பலவற்றில் எலிகளை அழிப்பதற்குத் தீவிர திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இன்றைய நச்சுப் பொருள்களின் ஆற்றல், தரம் என்பன பற்றிய ஆராய்ச்சிக்கு எலிகளையே விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றனர்.

## நிமிர்ந்தே நின்றிடுவோம்

சூதும் வாதும் சூழ்ந்த இந்த
சூழலில் இனிதாய் வாழ்ந்திடவே
பாடுபட்டு நாம் ஒன்றாய்
பயன்கள் பலதும் செய்திடுவோடும்
கசடறக் கல்விதனைக் கற்றிடுவோம்
கற்றதின்வழி நாம்நின் றிடுவோம்
ஒழுக்கம் தனையே ஓம்பிடுவோம்
இவ்வுலகினில் நிமிர்ந்து நின்றிடுவோம்

—எஸ் சாந்தலோஜினி
மல்லாகம் மகாவித்தியாயம்.

# நோயைத்தடுக்கவும் மாற்றவும் சுகாதாரம்பேணப்பட வேண்டும்

தற்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் சிரங்கு ஓர் முக்கிய சுகாதாரப் பிரச்சினையாகக் காணப்படுகிறது. நெருக்கடியான சூழலில் சமூக பொருளாதாரப பாதிப்புக்குள்ளானவர்கள் மத்தியில் கூடுதலான தாக்கத்தை இந்நோய் ஏற்படுத்தியிருக்கிறது. தனிநபர் சுத்தம் சரிவரப் பேணப்படாமையினல் சிரங்கு ஓர் நோயாளியில் இருந்து சுகதேகிக்குத் தோல்மூலம் பரவுகின்றது.

'சாக்கோப்ரிஸ் ஸ்கேபி' [Sarcoptis Scabie] எனும் ஒருவகை ஒட்டுண்ணி மூலம் இந்நோய் பரவுகின்றது. இவ்வொட்டுண்ணியைச் சாதாரணமாகக் கண்ணுல்பார்க்கமுடியாது. முன்னும் இருசோடி கால்கள் ஆமையின் தோற்றமுடைய இவ்வெட்டுண்ணிக்கு முன்னும் இரு சோடி கால்கள் பின்னும் இருசோடி உள்ளன. இந்நோய் எவ்வயதினரையும் பீடிக்கும் ஆனல் குழந்தைகளே கூடுதலாகப் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

### பரவும் விதம்

நோயாளியின் சருமம் சுகதேகியின் சருமத்தில் முட்டுதல், சேர்தல் காரணமாக நோய்த்தொற்று சம்பவிக்கின்றது. பொதுவாகச் சிரங்கினுற் பாதிக்கப்பட்டவருடன் சேர்ந்து ஒர கட்டிலில் நித்திரை செய்வதன்மூலம் இந்நோய் பரவுகின்றது அத்துடன் ஆண் — பெண் சேர்க்கை மூலமும் சம்பவிக்க முடியும். நோய்த்தொற்று சம்பவித்து இருவாரகால இடைக்காலத்தின் பின்பே சொறியத் தொடங்கும். ஆரம்பத்தில் சிகிச்சையளிக்கக் கவறின் கொப்பளங்களில் சீழ்கட்டிப் புண்ணுக மாறும்.

### சிரங்கு ஒட்டுண்ணியின் வாழ்க்கைவட்டம்

பெண் ஒட்டுண்ணி கருவுற்றதும் தோலைத் துளைத்துச் சென்று அதனுள் சீவிக்கும். தினமும் இரண்டு அல்லது மூன்று முட்டைகளையிடும். இவ்விதம் இவ்வொட்டுண்ணி 60 நாட்கள் வரையில் முட்டையிடும் ஒட்டுண்ணி ஏற்படுத்திய துளையை [கீறு] நாம் சாதாரணமாகக கண்மூலம் பார்க்க முடியும். முட்டைகள் சிலதினங்களில் கூட்டுப்புழுவாக மாறியதும் அவைகள் தோலின் மேற்பரப்பில் சீவிக்கும் காலக்கிரமத்தில் ஆண், பெண் ஒட்டுண்ணிகளாக வளர்ச்சி பெறுகின்றன. 17 தினங்களில் முட்டைகள் வளர்ச்சியடைந்த ஆண், பெண் ஒட்டுண்ணிகளாகின்றன. ஆண் ஒட்டுண்ணி தொடர்ந்து

3 இரண்டாம் நாள்- [24 மணித்தியாலங்களின் பின்பு] முதல்நாள் பூசியதுபோன்று உடல் பூராகவும் B. B. கிறீம் பூச படல் வேண்டும் இரண்டாம் நாளும் குளித்தல் கூடாது.

4. மூன்ரும் நாள்- [இரண்டாம் முறை பூசி 24 மணித்தியாலங்களின் பின்பு] நோயாளி குளித்தல் வேண்டும். நோயாளி உபயோகித்த துணி பாய், தலையணை ஏனைய பொருள்கள் சுடுநீரில் அவித்தல் வேண்டும். தோய்த்து உலர்ந்த ஆடை அணிதல் வேண்டும். சிகிச்சை அளித்த அடுத்த இருதினங்கள் சொறி, கடி இருக்கமுடியும். ஆனல் காலக்கிரமத்தில் அவை குறைந்துவிடும்.

### பொதுக்குறிப்பு

ஒரு வைத்திய ஆலோசனையின்பேரிலேயே சிகிச்சை மேற்

**டாக்டர் என். கனகசபை**
**பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்**

கோலின் மேற்பரப்பில் சீவிக்கும்

### பாதிப்புக்குள்ளாகும் இடங்கள்

மென்மையானதும் சுருக்கமடைந்ததுமாய தோல், விரல், இறை, மணிக்கட்டு, முழங்கை, கமக்கட்டு, இடுப்பு, தொடை முதலியன பாதிப்புக்குள்ளாகும் பெண்களில் அடிவயிறும் பாதிக்கப்பட நேரிடலாம் சிசுக்களிலும், குழந்தைகளிலும் அவர்களின் உள்ளங்கை உள்ளங்கால், தலை, முகம் முதலிய அவையவங்களும் பாதிக்கப்பட நேரிடலாம்.

### சிகிச்சை

1. குறிப்பிட்டபிரகாரம் சிகிச்சையளிக்கில் முற்ருக இந்நோயைக் குணப்படுத்த முடியும் நோய் பூரணமாகக் குணமடைய திருந்தல் அல்லது மீண்டும் சம்பவிப்பதால் திருப்திகரமாகப் போதிய சிகிச்சை பெறவில்லை என்பதையே குறிப்பிட முடியும். பீ பீ. கிறீம் [Benzyl Benzoate Cream] 1% கமா பென்சீன் கெக்சோகுளோரைட் [1% Gamcma Benzene Hexachloride]. சல்பரில் தயாரிப்பவைகள் [Sulphur Preporations] முதலியவைகள் தற்போது பாவனையில் உண்டு B. B கிறீம் மிகவும் பாதுகாப்பானது. அத்துடன் சிறந்த முறையில் குணமாக்கவல்லதும் எனக் குறிப்பிட முடியும்.

2. முதலாம் நாள் நோயினுற் பீடிக்கப்பட்டவர் வெந்நீரில் சவர்க்காரம் இட்டுக் குளித்த வேண்டும். பாதிப்புகுள்ளான இடங்கள் பிரஸ் மூலம் அல்லது தேங்காய்த்துப்பு போன்றவற்றினுல் நன்ருக உரஞ்சிக் கழுவப்படல் வேண்டும் இவ்விதம் செய்வதன் மூலமே தோலின் உட்புறத்தில் இருக்கும் சிரங்கு ஒட்டுண்ணியைத் தோலின் மேற்புறத்திற்குக் கொண்டுவர முடியும். நோயாளியின் உடலில் உள்ள நீரை நன்ருகத் துடைத்தும், குறிப்பிட்ட நோயாளியின் உடல் பூராகவும் ஓர் பிரஸ்மூலம் கழுத்துச்குக் கீழ் உள்ள அவயவங்கள் யாவற்றிற்கும் B. B. கிறீம் பூசப்படல்வேண்டும். உடனடியாகக் கழுவக்கூடாது. நன்ருக உலர்ந்தபின்பே ஆடைகள் அணிதல் வேண்டும்.

கொள்ளப்படல் வேண்டும். குறிபபிட்ட பிரகாரம் ஆரம்பத்தில் சிகிச்சையளிககில் நோய் உடன் குணமடையும். ஆனல் அநேகமான மக்கள்மத்தியில் இந்நோய் பலமாதக் கணக்கில், [சிலரில் மாதக் கணக்கில்] குணமடையாதிருக்கக் காரணம் யாது எனச் சிந்திக்க வேண்டும்?

சிகிச்சையளித்தும் நோய் பூரணமாகக் குணமடையாதிருப்பதற்குரிய காரணங்கள்:

1 சிரங்கினுற் பாதிப்புக்குள்ளாகிய இடங்கள் சரிவரக் கழுவப்படுவதில்லை.

2 சிலநோயாளர்கள் இரண்டாம் நாளை மருந்து பூசுவதில்லை. அத்துடன் உடல் பூராகவும் மருந்து இருதினங்களும் சரிவரப் பூசப்படுவதில்லை. பூசிய மருந்து உலர்வதில்லை

3 ஒருவீட்டில், பலர் நோயினுற் பீடிக்கப்பட்டிருப்பின், ஒரேநேரத்தில் யாவரும் சிகிச்சை பெறுவதில்லை.

4. நோயாளர் உபயோகித்த உடைகள் கொதித்த நீரில் அவிக்கப்படாமை.

சீழ் கட்டிய கொப்பளங்கள் இருப்போர் B. B. கிறீம் பூசுவது மாத்திரம் போதாது. வைத்தியரின் ஆலோசனையில் வேறு மருந்துகளும் எடுக்க நேரிடலாம்.

### நோய்த்தடையும் மக்கள் பங்களிப்பும்

சிரங்கு ஓர் சமூகப்பிரச்னை. மக்கள் ஒவ்வொருவரும் இந்நோய் பரவும் விதம் அதற்குரிய சிகிச்சை சம்பந்தமாக நன்கு அறிந்திருத்தல் வேண்டும். நோயாளர்களை ஆரம்பத்தில் இனம் கண்டு தகுந்த சிகிச்சை அளித்தல் வேண்டும். பாடசாலை மாணவர்கள் பூரண சிகிச்சையின் பின்பே பாடசாலைக்குச் செல்லுதல் வேண்டும். தனிநபர் சுத்தம் பேணப்படல்வேண்டும். ஆசிரியர்கள், சுகாதார ஊழியர்கள், தொண்டர்கள், சமூகநலன் விரும்பிகள், மக்கள் மத்தியில் இந்நோய் சம்பந்தமாகவும், நோய்த்தடை சம்பந்தமாகவும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல் வேண்டும். பொதுஸ்தாபனங்கள் நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு உதவி நல்க வேண்டும்.

---

## குழந்தைகள் மகிழ

பல தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் ஆடைகளில் தேவையில்லாதஅலங்காரங்கள், பூவேலை போன்றவைகளைச் செய்வதற்கு நேரத்தை பெறுவதற்காகதங்கள் குழந்தைகளை சரிவர கவனிக்காமல் விட்டு விடுகிருர்கள். குழந்தைகள் களைப்புற்றிருக்கும் போதும். அவர்களுக்குத் தாயின் கவனிப்புத் தேவையாக இருக்கும் போதும் அவர்கள் கவனிக்காமல் அசட்டை பண்ணப் படுகிருர்கள். இப்படிப்பட்ட சமயங்களில் அவர்களுக்கு தின்பண்டமோ. உணவோ தேவையில்லை என்பதோடு அப்படிக் கொடுக்கப்படுபவை அவர்களுக்குத் தீமையையே உண்டுபண்ணுகின்றன என்பதும் மிகமிக உண்மை. அவர்களுக்குத் தேவையானது தாயின் ஆதரவான அரவணைப்புத்தான். ஒவ்வொரு தாயும் தனது குழந்தைகளுக்கு இத்தகைய அன்பையும, அரவணைப்பையும் அளிப்பதற்கு நேரத்தை ஒதுக்கவேண்டும் இத குழந்தைப் பருவத்திலும், சிறு பள்ளைப்பருவத்திலும் மிக மிக அவசியம் இவ்வாருக தாயானவள் தனதுகுழந்தைகளின் இதயங்களைத் தான் அளிக்கும் மகிழ்ச்சி நிறைவால் கட்டிப்போட முடியும். நமக்கு இறைவன் எப்படியோ அப்படியே சாயானவள் குழந்தைகளுக்குக் காணப்படுகிருள்.

[ஆதாரம் நல்வழி]

- தொகுப்பு- க. கனகராசா

---

# நீதி பிறந்தது

**[குறுங்காவியம்]**

**காரை. செ. சுந்தரம்பிள்ளை**

**( 4 )**

காவலர் ஓர்சிலராலே -தீய
காலிகள் வாழ்ந்திடு கின்ருர்
பாவியர் எம்மை வருத்திச் -செல்வம்
பன்மடங் காக்கிடு கின்ருர்
சாவை விலைகொடுத் தன்ரோ -இளம்
சந்ததி தம்மை அழிக்கும்
கேவலம் போக்கிட வேண்டும் -எங்கள்
கீழ்நிலை மாறிட வேண்டும்.

தாலியைக் காத்திட வேண்டும் -எங்கள்
தைலர் வாழ்ந்திட வேண்டும்
சோலிகள் நீங்கிட வேண்டும் -மக்கள்
துன்பதைப் போக்கிட வேண்டும்
காலிக மாய்ந்திட வேண்டும் -அவர்
கயமைகள் தீய்ந்திட வேண்டும்
வேலியாய் நிற்கின்ற வேந்தே -எங்கள்
வேதனைபோக்கிட வேண்டும்.

என்று பலவா றுரைத்தே -மக்கள்
இதயம் கலங்கிட லாஞர்
குன்றுங் கரைந்திடு வண்ணம் -அவர்
கூறிய வார்த்தைகள் கேட்டே
மன்றில் இருந்தவ ரெல்லாம் -தங்கள்
மன்னன் முகத்தினைப் பார்த்தார்
கொன்றிடு கோபத்தனுகி - செங்
கோல னுரைத்திட லானுன்.

புண்ணிய பூமியென் ருேதும் -எங்கள்
புராதன மான நன்னுடடில்
கண்ணிய மற்ற செயலை -செய்யும்
காதகர் யாரென்ற போதும்
திண்ணமுடன் கைது செய்தே - சிரஞ்
சீவுவேன் நீதிப் படியே
எண்ணிய வாறு முடிப்பேன் -நீர்
ஏகிடுவீர் அச்ச மின்றி.

சூது களவில்லா நாட்டில் -மதுத்
துளியும் படாத இம மண்ணில்
தீது புரிந்தவர் யாரோ -அவர்
செய்கையின் காரணம் யாதோ
பாதகர் யாரென்ற போதும் -அவர்
பாவச் செயல்களை ஒப்பேன்
நீதியின் முன்னர் நிறுத்தி -நான்
நிச்சயம் தண்டனை ஈவேன்.

அந்நிய ராய்இருந் தாலும் -அவர்
அடுத்தவ ராய்இருந் தாலும்
என்னரும் நண்ப ரென்ருலும் -எங்கள்
எதிரிக ளாய்இருந் தாலும்
இன்னல் தருவனவற்றை -நாட்டில்
யார்கொண்டு வந்தவ ரேனும்
அன்னவர் நீதியின் முன்னர் -ஏற்ற
ஆக்கினை யாவும் பெறுவர்.

பதவி உயர்ந்தவ ரேனும் -செல்வம்
படைத்த முதலாளி யேனும்
அதிகாரம் மிக்கவ ரேனும் -எந்தன்
அமைச்சரே யாகிய போதும்
மதியாமல் இச்செய லாலே -எங்கள்
மண்ணை இழிவு செய்திட்ட
சதிகாரர் யாரென்ற போதும் - ஏற்ற
தண்டனை நிச்சயம் ஈவேன்.

நாட்டைக் கெடுத்திடு கின்ற -இந்த
நாசச் செயல் புரிகின்ற
கூட்டத்தைப் பூண்டோ டொழிப்பேன் -அவர்
கொட்டத்தை இன்ருே டழிப்பேன்
ஆட்டிப் படைக்கும் மதுவை -பணம்
யாவும் அழிக்கின்ற சூதை
காட்டிக் கொடுக்கும் வஞ்சத்தை -எந்தக்
காரணம் கொண்டும் ஏற்கேனே.

ஆவியை ஒத்த பெரியீர் -நல்ல
அன்புள்ளம் கொண்ட தாய்மாரே
பாவியர் செய்கையினலே -நீங்கள்
பட்ட துயரம் உணர்வேன்
காவலன செய்கை பிழைத்தான் -என்ற
கவலையே கொல்லுதென் நெஞ்சை
கேவலம் இந்நாள் வரைக்கும் -இந்தக்
கீழ்மை அறிந்திலேன் அன்ருே.

உள்ளூரில் ஆட்சி புரிவோர் -இந்த
உண்மையைக் கூறிட வில்லை
கள்ளத் தனத்தினை மூடிச் -சில
காவலரும் மறைத் திட்டார்
எள்ளத் தனையும் இனிமேல் -இந்த
இன்னல் நிகழ்ந்திடா துண்மை
உள்ளம் மகிழ்ந்து நீர்செல்வீர் - நாளை
உண்மை உலகம் உணரும்.

மக்களை மக்களாய் எண்ணும் -எந்த
மன்னனும் தாழ்வதே இலலை
மக்களை மாக்களாய் எண்ணும் -எந்த
மன்னனும் வாழ்வதே இல்லை
ஒக்கவே மக்களை எண்ணி -நீதி
ஒன்ருகவே செய்யும் மன்னன்
தக்கவன் தெய்வம அவனே -இதைச்
சாத்திரம் யாவும் உரைக்கும்.

[தொடரும்]

# நெல்லை க. பேரனின் சத்தியங்கள்

அண்மையில், நெல்லை க. பேரனின் 'சத்தியங்கள்' என்ற இரண்டாவது சிறு கதைத் தொகுதி வெளிவந்துள்ளது. 1968ம் ஆண்டு தொடக்கம் 1987ம் ஆண்டு வரை எழுதப்பட்ட பதினேழு சிறுகதைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

இப் பதினேழு சிறு கதைகளையும் வசதி கருதி பின்வருமாறு வகுத்துக் கொள்ளலாமென்று தோன்றுகிறது.

[அ] கொழும்பு வாழ்க்கையைக் களமாகக் கொண்டவை. [வாடகைக்கு வீடு, புகை, சினிமாவிற்குப் போகிறார்கள், ஒரு விதமான கதை]

[ஆ] யாழ்ப்பாண வாழ்க்கையைக் களமாகக் கொண்டவை (பெருமூச்சு, மனப்போக்கு, ஒரு புது அத்தியாயம் ஆரம்பிக்கிறது. [ஒரு தொழிலாளி சைக்கிள் வாங்குகிறான், ஒரு ஞாயிற்றுக்கிழமை நாற்பது நிமிடம்]

[இ] மத்திய கிழக்கு வாழ்க்கையைக் களமாகக் கொண்டவை. (சத்தியங்கள் திரளும போது, மெல்ல இனிச்சாகும், அன்புள்ள எழுத்தாளருக்கு!)

[உ] அண்மைக் கால யாழ்ப்பாண வாழ்க்கையைக் களமாகக் கொண்டவை. (ஒரு பென்சன்காரர் பயணம் போகிறார். பிள்ளைகள்)

மேற்கூறியவற்றுள், முதலாவது வகைக் கதைகள், நவீன நாகரீக மோகம், வாடகை வீட்டுப் பிரச்னை முதலானவை பற்றிப் பேசுகின்றன. ஒரு காலகட்டக் கொழும்பு நகரத் தமிழ் மக்களது வாழ்க்கை உணர்வுகளை அப்படியே வெளிப்படுத்துகின்றன என்பதைத் தவிர இவை பற்றிக் கூற வேறெதுவுமில்லை.

இரண்டாவது வகைக் கதைகள், அரசாங்க உத்தியோக மோகம் பற்றியும், சாதாரண தொழிலாளரது அபிலாஷைகள், துன்பங்கள் பற்றியும் வெளிப்படுத்துவன. இத்தகைய சில பாத்திரங்கள் (உ+ம் கக்கூஸ் தொழிலாளி) ஈழத்துச் சிறுகதைகளில் இடம் பெறுவது அரிது என்ற விதத்தில், இவை குறிப்பிடத்தக்கனவாகலாம்.

மூன்றாவது வகைக் கதைகளும் -மத்திய கிழக்கு அனுபவங்கள் - மிகக்குறைவாகவே

[10ம் பக்கம் பார்க்க]

செ. யோகராசா


# இதோ, நீங்களும் நெஸ்பிரே புலமைப்பரிசில் ஒன்றை வெல்லலாம்




1986ல் நெஸ்பிரே புலமைப்பரிசில் வென்ற தெஹிவளை, சுபோதாராம வீதி 35/2, இலக்க இல்லத்தில் வசிக்கும் சின்னஞ்சிறிய நதுன் அமா தயானந்த.

## மாதாந்தம் 5 அதிஷ்டசாலிகளுக்கு ரூ. 10,000/-

நெஸ்பிரே பருகுவோருக்காக இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான புலமைப்பரிசில்கள் காத்திருக்கின்றன நான்கு மாதங்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஐந்து அதிஷ்டசாலிகள் தலா ரூ. 10,000/- கொண்ட ரொக்கப் புலமைப்பரிசில்களைப் பெறுவார்கள்.

## பங்குபற்றும் வழி




3 சாதாரண நெஸ்பிரே (பச்சை-மஞ்சள்) பக்கெட்டுகளின் அல்லது 2 நெஸ்பிரே இன்ஸ்டன்ற் (சிவப்பு-மஞ்சள்) பக்கெட்டுகளின் அடிப்பகுதி அட்டைகளை வெட்டியெடுங்கள். இவற்றையும் சரியாக நிரப்பிய பிரவேசக் கூப்பனையும் ஒரு கடித உறையில் இட்டு அனுப்பி வையுங்கள்.

முகவரி: ''நெஸ்பிரே புலமைப்பரிசில்'', த.பெ. 1711 கொழும்பு

ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றுடனும் தேவையான நெஸ்பிரே அடிப்பகுதி அட்டைகளும் பிரவேசக் கூப்பனும் இருத்தல் வேண்டும். தேவையாயின் பிரவேசக் கூப்பன்களை நீங்களே பிரதிபண்ணிக் கொள்ளலாம். இன்றே நெஸ்பிரே அட்டைகளைச் சேகரிக்கத் தொடங்குங்கள்.

மாதாந்தச் சீட்டிழுப்பிற்கான விண்ணப்ப முடிவு தினங்கள் ஏப்பிரல் 10, மே 8, ஜூன் 12, ஜூலை 9 சீட்டிழுப்புகள் மறுதினம் நடத்தப்படும்.

நெஸ்லே லங்கா லிமிட்டெட், தொம்ஸன் லங்கா லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் பங்குபற்ற முடியாது. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. எவ் வித கடிதத் தொடர்புக்கும் இடமில்லை.




பிரவேசக் கூப்பன்

பெயர்: ____________________

____________________

முகவரி ____________________

____________________

____________________

நெஸ்பிரே உனக்கு வேறெதைத் தருகிறது?. விடை 'ஆம்' எனின் ✓ அடையாளமிடவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புரதம் | ஆம் | | விட்டமின்கள் | ஆம் | |
| கல்சியம் | ஆம் | | கொழுப்பு | ஆம் | |

3. சாதாரண நெஸ்பிரே பக்கெட்டுகளின் அல்லது 2 இன்ஸ்டன்ற் நெஸ்பிரே பக்கெட்டுகளின் அடிப் பகுதி அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன.

Licence No – S/583

# புலமைப்பரிசில்களில் ரூ. 200,000/- நெஸ்பிரே பருகுவோருக்கு மட்டும்

J.W.T. NL2194

# கார்ட்டூன் ஓவிய உலகில் நான்

**சிரித்திரன் சிவஞானசுந்தரம்**

(17)

**நான்** மதுரைக்கு ரயில் மார்க்கமாகப் போய்க்கொண்டிருக்கையில் எனது 'கொம்பார்ட்மென்டில்' சேர் பொன்னம்பலம் இராமநாதன் உடையில் ஒருவர் பிரயாணம் செய்து கொண்டிருந்தார் அவர் முகத்தில் தத்துவஞானி சர்வப்பளி ராதாக்கிருஷ்ணன், தத்துவஞானி பேடரன் ரஸல், தத்துவஞானிகிருஷ்ணமூர்த்தி எல்லோரினதும் முகச்சாயலும் தென்பட்டது இந்த ஞானிமுன் என் மூளையின் நிர்வாணத்தைக் காட்ட விரும்பாமல் சடும் கொடும் மௌன விரதம் அனுஷ்டித்தேன். இருந்தும் என்னை விருண்டும் தத்துவ விசாரம் என்னை வாய் திறக்கச் செய்தது.

### டார்வின் பரிணும வளர்ச்சி

''சார் என்னை மன்னிக்க வேண்டும். உங்களை ஒரு கேள்வி கேட்கவிரும்புகிறேன. கேட்கலாமா?'' என்றேன் அந்தத் தீட்சண்யமான முகம் தாட்சண்யமாக ''தட்டுங்கள் திறக்கப்படும்'' எனத் திருவாய் மலர்ந்தது. ''சார்... டார்வின் அவர்களின் பரிணும வளர்ச்சி மனிதனுடன்ஸ்தபபிதமாகி விட்டதா? அல்லது ஒரு அபூர்வ பிறவி ஒன்று தோன்றுமா?'' எனக் கேட்டேன் அவர் ஒரு புன்னகையைத் தவழவிட்டுத் தனது தத்துவத்தைக் கூறினர் ''மனிதனுக்குள் ஒத்திசைவு இல்லாத ஓட்டம் உலகத்தைக் கலக்கிக்கொண்டிருக்கிறது சாணக்கியம் என்ற பெயரில் கொடூரத்தை அரசியல்வாதிகள் சாணைபிடித்துக் கூர்மைப்படுத்திக்கொண்டிருக்கின்றனர்கள். 'ஒத்திசைவு'- 'HARMONY, என்ற சர்வலோக லயஞானத்தில்தான் அந்த அபூர்வ மனிதன் தோன்றலாமென்ருர். ''The World is Mad after Mony and not after Harmony'' என்றும் கூறி முடித்தார் நான் இந்த உரையாடல் நிகழ்த்திய காலத்தில்தான் ஹீரோஷிமாவிலும் நாகசாக்கியிலும் நாசகார அணு குண்டுபோடப்பட்டது இன்று எங்கள தலையில் குண்டுகள் போடுவதற்கு யந்திரக் கழுகுகள் வட்டமிடுகின்றன.

### நகைச்சுவை

நகைச்சுவை என்னவென்று தெரியா மாமன்னன் அலெக்ஸாண்டர். நெப்போலியன ஹிட்லர் போன்ற தப்மிஷ்டவாதிளின் கரங்களில் உலகம் சிக்குவதால்தான் வரலாற்று ஏட்டுப்பக்கங்களில் குருதி வாடை வீசுகின்றது. ''இடுக்கண் வருங்கால் குண்டு இடுக'' என்று வள்ளுவப் பெருந்தகை கூறவில்லை ''நகுக'' என்றுதான் கூறினர் காந்தி மகானும் ''எனக்குச் சிக்கத் தெரியாவிடில் நான் என்றோ தற்கொலை செய்திருப்பன்'' என்று கூறியுள்ளார்.

### சிரிப்புத் தொண்டின் புண்ணியம்

வெலிசறை காசநோய் ஆஸ்பத்திரியில் மரணத்தின் நிழலில் இருந்த நோயளிகளை மகிழவைத்த சிரிப்புத் தொண்டின் புண்ணியம் என்னைச் சேரும். காலை எழுந்து பத்திரிகையில் சவாரித்தம்பர் விருந்தினை ரசித்துவிட்டு என்னைப் பாராட்டி எழுதப்பட்ட கடிதங்கள் எனக்குக் கிடைத்த பெரும் விருதுகளென மதித்தேன்.

### இன்று ஷெல்லடி அன்று கல்லடி

ஸ்ரீமாவோ அம்மையார் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்த கலமது. தமிழரசுக்கட்சியினர் சிங்கள 'ஸ்ரீ' க்குளகிர்ப்புக் காட்டுவதற்கு யாழ்ப்பாணக் கச்சேரி முன்னல் அமர்ந்திருக்கின்றுாகள் இன்று 'ஷெல்' அடி கோட்டையிலிருந்து வருவதுபோல் 'கல்லடி' கச்சேரி உளளிருந்து வந்து சத்தியாக்கிரகிகளின் தலையைப் பசம் பார்க்கும். இதைக்கண்டு சின்னக்குட்டி சீற்றம்கொண்டார். சவாரித்தம்பரின் வண்டிலை எடுத்துக்கொண்டு கச்சேரிக்குள் ஓட்டிச் செல்ல முயல்கின்ருர் ஒருராணுவ வீரர் அவரை தடுத்து நிறுத்துகின்ருர். ''அடோ இது கச்சேரியென்று தெரியாதா? என்ன உள்ளுக்கு கரத்தை கொண்டு போறது'' என ஒரு சிப்பாய் சிவந்து சினக்கின்ருர் அதற்கு சின்னக்குட்டி ''காக்கித்துரை எனக்கு வீடுகட்டுவதற்கு கல்தேவை.'' ''அடோ போபோ'' என்கிருர் சிப்பாய். சின்னக்குட்டியும் தனது குட்டைக்கொடுத்துவிட்டுத்தான் வண்டிலைத் திருப்புகின்ருர். ''உது சச்சேரியல்ல கல்சேரி கல்லெறிந்து விளையாடுகிறியள்'' எனக் கூறிப்போகின்ருர்.

### யாரறிவார் ராஜகுமாரா?

பல போர்வீரர்கள் சேர்ந்து ஒரு மறி ஆட்டைஓடிப்பிடித அதன் கழுத்தில் சிங்கள 'ஸ்ரீ'யைத் தொங்கவிட்டு ''பயிலா'' ஆடி மகிழ்ந்தனர் நானும் தினகரனுக்கு வரைந்த சித்திர கானத்தில் ஒரு ஆட்டை வரைந்து அதன் கழுத்தில் ஒரு சிங்கள 'ஸ்ரீ'யைத் தொங்கவிட்டு ஆட்டின் பக்கத்தில் ஒரு சிப்பாயையும் வரைநது ''யாரறிவார் உந்தன் வீரச்செயலை ராஜகுமாரா?'' என்ற பாட்டையும் சீழ் எழுதியிருந்தேன் அந்தக் காலகட்டத்தில் அந்தக் கார்ட்டூன் கரும்பாகச் சுவைத்தது.

இந்தியாவின் பிரபல்யமான கார்டடூன் ஏடாகிய ''சங்கர்ஸ்'' வீக்கலியின் காலு அன்ட் மீரு என இரு ஏழைச்சகோதரங்களின்கார்ட்டூன் தொடர் சித்திரம் ஒன்று வெளிவந்தது. அதை 'சாமுவெல்' எனும் ஓவியர்வரைந்து வந்தார். அந்தச் சகோதரங்களின் பிறந்ததினவிழா கார்ட்டூனில் அறிவிக்கப்பட்டது. இந்தியாவின் நாலு திசைகளிலிருந்தும் சங்கர் பத்திரிகைக் காரியாலயத்தில் பிறந்தநாள் பரிசுகள் வந்து குவிந்தன. அவர்கள் ஏழைசிறுவன் சிறுமியாக இருந்தபடியால் ஏராளமன ஆடை அணிகளேகூடுதலாக வந்து குவிந்தன.

### ஒன்று இரண்டாக

சவாரித்தம்பரின் சகபாடி சின்னக்குட்டி ஒரு சாரயப் பிரியர் ஒருநாள் குடிபோதையில் வந்து தம்பர் வீட்டு முற்றத்தில் சோளகக் காற்றுக்கு ஆடும் தென்னை மரம்போல் ஆடிக்கொண்டு நிற்கின்ருர் சவரித்தம்பர் மனைவி ஓடி வந்து ''அறுவான் வீட்டிற்குள் பாம்பு ஆடிக்கொண்டு நிற்கிறது நீ முற்றத்தில் நின்றுஆடிக்கொண்டுநிற்கிருய் ஒருசடி எடுத்து அடியன்'' என்கிருர். சின்னக்குட்டி தடி எடுத்து வந்து 'அக்கா இரண்டு பாம்பு தெரிகிறது. எதற்கு அடிக்கிறது?'' என்கிருர். தம்பரின் மனைவியோ ''நாசமாப் போனுய் ஒருபாம்புக்கு அடி இரண்டும் சாகும்'' என்கிருர்.

இந்த மதுப்பிரியர் சின்னக்குட்டி குடியால் ஈரல் கருகி சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதைச் செய்தியாக எழுதி பத்திரிகையில் வெளியிட்டிருந்தேம் இதைப் படித்த சவாரித்தம்பர் நேயர்களிடமிருந்து சின்னக்குட்டி நலன் விசாரித்து, ஈசல்போல பத்திரிகைக் காரியாலயம் வந்து கடிதங்கள் குவிந்தன மூஸ்லிம் தம்பர் பிரியர்களோ.

[10-ம் பக்கம் பார்க்க]

---

## அவுஸ்திரேலிய வங்கி துரித நடைமுறை

அவுஸ்திரேலியா மிக வளமிக்க நாடு வசதியான வாழ்க்கைசகும் இலகுவான சீவியத்திற்கும் வாய்ப்புக்கள் அதிகமுள்ளநாடு. இவற்றுக்கு மேலாக அவுஸ்திரேலியாவின் வங்கிகளின் நடைமுறை தனிச்சிறப்புறுகின்றது அங்கு வங்கி நடவடிக்கைகள் மிகமிக எளிதாக்கப்பட்டுள்ள தோடு சாதாரண மனிதன்கூட எவ்வித சிரமமுமின்றி பணம் வைப்பிடவும், பெற்றுக் கொள்ளவும் முடிகின்றது அதுவும் ஒருசில நிமிடங்களில்.

வங்கிகளில் உள்ளேயும் வெளியேயும் வைத்துள்ள மெசின்களில் எமது வங்கிக் கட் (card) டைப் போட்டு பட்டினை அழுத்துவதன் மூலம் பணம் எடுக்க முடியும். வங்கியில் வைப்படவும் முடியும். இவ்வாறு காலை 9 மணி முதல் இரவு 12 மணி வரை இந்த மெசின்கள் மூலம் பணம் பெற்றுக் கொள்ளமுடிகின்றது.

— ஜெயந்தி அவுஸ்திரேலியா.

---

## கறுப்பன உரிமை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சறுப்பினத்தவர்களும் பெருமளவில் இன்று தமது நிலையை உணர்ந்து ஆளப்படுபவர்கள் என்ற நிலையிலிருந்தும் விடுபடத் தீவிரமாகியுள்ளனர்.

தென்னுபிரிக்காவின் சிறுபானமை வெள்ளை இன ஆளும் வர்க்கத்திற்கும் ஆளப்படும் பெரும்பான்மை கறுப்பினத்துக்குமிடையிலான ஆட்சி உரிமைப்போராட்டம் முட்டி மோத ஆரம்பித்துள்ள இக்காலகட்டத்திலேயே 'வெள்ளை இனத் தேர்தல்' இங்கு நடந்து முடிந்துள்ளது.

சிறுபான்மை வெள்ளை ஆட்சியாளர்கள் தமக்குத்தாமே நடத்திய இத்தேர்தலில் கறுப்பர்களுக்கு வாக்குரிமையோ, போடடியிடும் உரிமையோ இருக்கவில்லை

இனவாதத்தை வளத்துவரும் போத்தாவின் தேசியக்கட்சி, அண்மைக்காலங்களில் தென்னுபிரிக்காமீது போடப்பட்ட சர்வதேச பொருளாதாரத் தடைகள் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் காரணமாக இத்தேர்தலில் அதன் செல்வாக்கை இழக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது

ஆனல் பலத்த ஏமாற்றமே கிடைத்தது. போத்தாவின் தேசியக்கட்சி மீண்டும்பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

### இறுதித் தேர்தல்

கறுப்பினத்தவர்கள் பங்கு பற்ருத ஒரு தேர்தலாக இது இருந்தபோதிலும், இருசாராரினதும் அரசியல் போக்கை கணிப்பிடக்கூடிய ஒரு பலப்பரீட்சையாக இத்தேர்தல் விளங்கியது.

இதில் வெள்ளை இன சிறுபான்மை அரசு தனது நிலையை ஸ்திரப்படுத்திக்கொண்டாலும் மறுபுறத்தில் கறுப்பினத்தவரின் உரிமைப்போராட்டத்தை இத்தேர்தல் கூர்மைப் படுத்தியுள்ளது.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் என்ற கறுப்பினத்தவரின் பிரதான அரசியல் கட்சியின் தலைவரான திரு. ஒலிவர் தப்போ ''இனிமேலதான கறுப்பினத்தவரின் போராட்டம்முனைப்படையப்போகிறது'' என்று கூறியுள்ளார்.

நடந்துமுடிந்த தேர்தலில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் வெள்ளை இனத்தவர்களில் ஒருசாரார்கூட கறுப்பர்களுக்காக குரல்கொடுத்துத் தேர்தலைப் பகிஷ்கரித்துள்ளனர். அவர்களிற் சிலர் கைதாகியுள்ளனர்

எனவே தென்னுபிரிக்க கறுப்பர்களின் விடுதலை உத்வேகத்தை தட்டிவிட்டுள்ள இந்த வெள்ளை இனத்தேர்தல் தென்னுபிரிக்காவில் இடம்பெற்ற இறுதி வெள்ளை இனத் தேர்தலாகவும் விளங்கமுடியும். திரு. பி டபிள்யுபோத்தாகூட இறுதி வெள்ளை இனத் தலைவர் என்ற 'பெருமை'யையும்விரைவில் பெறலாம்.

---


# மேர்ச்சன்ட் பிறுன்ஸ்

லிமிட்டெட்

555, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோவில் மேற்கு வீதியடி)

யாழ்ப்பாணம்.

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 02-05-1979

நிலையான வைப்புத்திட்டங்கள் 01-05-1987 தொடக்கம்

வருட வட்டி விகிதம்

| காலம் | வட்டி % | ஊக்குவிப்பு போனஸ்% | மொத்த வட்டி ஊக்குவிப்பு% போனசுடன் |
|---|---|---|---|
| 6 மாத வைப்பு | 9 | — | 9 |
| 1 வருட வைப்பு | | | |
| மாதாந்த வட்டி | 14 | 2 | 16 |
| காலமுடிவில் வட்டி | 14 | 4 | 18 |
| 2 வருட வைப்பு | | | |
| மாதாந்த வட்டி | 14 | 4 | 18 |
| காலமுடிவில் வட்டி | 14 | 6 | 20 |

பிரதான தொழில் வகைகள்

★ வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன்வழங்கல்.

★ வர்த்தக வாகனங்கள் உழவு யந்திரங்கள் முதலியனவற்றுக்கு வாடகைக் கொள்வனவிற்கு கடன் வழங்கல் முதலியன.

நிதி நிலைமை

| | 31-3-1984இல் முடிந்த வருடத்திற்கு | 31-3-1985இல் முடிந்த வருடத்திற்கு | 31-3-1986ல் முடிந்த வருடத்திற்கு |
|---|---|---|---|
| | ரூ. ,000 | ரூ. ,000 | ரூ. ,000 |
| பங்கு மூலதனம் | 100, | 100, | 100, |
| ஒதுக்கிய நிதி | 1010, | 1085, | 1085, |
| நிலையான கடன் முறிகள் | 597, | 597, | 597, |
| வைப்புகள் | 12401, | 14268, | 12753, |
| பெற்றகடன்கள் | — | — | — |
| வரிக்குமுன் லாபம் | 1131, | 514, | [170] |
| வரிக்குபபின் லாபம் | 481, | 139, | [170] |
| வழங்கப்பட்ட பங்கு லாப வீதம் | 30, | 30, | Nil |

இயக்குநர் சபை

A. சோமசுந்தரம்பிள்ளை, B. A., F. C. A. தலைவர், முகாமைத்துவ இயக்குநர்.
K. நடராசா, B Sc (Econ), Bar-at-Law, Attorney-at-Law.
C. மகேசன், Attorney-at-Law.
S. மகேந்திரா, B. Sc (Cey) இயக்குநர் கடன் வசதிகள்.
S. சிவஞானம், Retd. S. L. A. S.

[எ3964]

# ஞாயிற்றுச் சிந்தனை

வேலிகளே பயிர்களை மேயும் காலமிது. பாதுகாப்பு அளிக்க வேண்டியவர்கள் அழிவுக்கு வழி தேடுகின்றனரே. இதனால் எம் சமூகங்கள் தேய்ந்தொழிந்து போகின்றன. மக்கள் அழுகுரல் எங்கும் எதிரொலிக்கின்றன. தலைவர்கள் மக்களை அசதிகளாக நடத்தும் நிலைகளுக்கு இயேசு மிகவும் பொருத்தமான உவமை கொண்டு தலைமைக்கு வரைவிலக்கணம் வழங்குகின்றார். தலைவன் மந்தையை மேய்க்கும் நல்லாயன் போலச் செயற்பட வேண்டும். ஆயன் முன்னே செல்ல அவனது பழக்கப்பட்ட குரல் ஆடுகளுக்கு அமைதியளிக்கிறது. ஆயன் மந்தைக்காக வாழ்பவன். அவனது நேரம், கவனம், கரிசனை அனைத்தையும் மந்தையின் நல்வாழ்வுக்காக அளிப்பவன். மந்தையினைப் பசும்புல் மேச்சல் நிலங்களுக்கு வழிநடத்திச் செல்பவன். தூய்மையான நீரோடைகட்கு அழைத்துச் சென்று நீரூட்டுபவன். காயங்களைக் குணமாக்கி இரவினிலே விழித்திருந்து காவல் புரிபவன். மந்தைப் பட்டிக்குள் வாயில் வழியாகவே, அதாவது நேரிய வழியாகவே நுழைபவன். ஓநாயின் குரல் கேட்டு மந்தையை கைநெகிழ்ந்து விட்டு ஓடிச் செல்லும் கூலியாளும் அல்ல. அன்றேல் தன் நலனுக்காக மந்தையினைத் தின்று மகிழும் திருடனுமல்ல. இவ்வாறு நல்லாயனைப் போன்று வழிநடத்திப் பாதுகாக்கும் இறைமகன் இயேசு மன்னுயிர்க்காகத் தன்னுயிர் கொடுத்தவர்.

—சுவாமி ஜீவா போல்—

## வீரம் வேட்கும்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பெண்ணைப் பெற்றவர் மகட்கொடை மறுக்கு மிடத்து பணிந்து கேட்டும் பொருள் கொடுத்தும் அவளை அடைய முயற்சிப்பதும் உண்டு.

சமாதான முயற்சிகள் பயனற்றும் போமிடத்து அவள் காரணமாகப்போர் மூளுவதும் உண்டு.

## கிருஷ்ணமூர்த்தி...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கள், கொள்கைகள் என இறுகப் பிடித்துப்பூட்டி வைத்துக் கொண்டால் அங்கு உண்மை ஒளி வீச இடமில்லை. ஏனெனில் சூரிய ஒளியைப் போல் உண்மையும் ஒருகால பக்குவத்தில்தான் உள்ளத்தில் ஊறும். இதற்குத் திறந்த உள்ளத்துடன் காத்திருங்கள்.


பிரயாண ஒழுங்குகள்

பாஸ் போட், விசா,

விமான சீட்டுகள்,

மாலை தீவு வேலை வாய்ப்பு.

மாலை தீவிற்கு போக விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். நோர்வே, நியூசிலன், ஜேர்மன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

24 பேர் மாலை தீவிற்கு போய் விட்டார்கள்.

N. மகாதேவா

உப்புமடம் சந்தி, K. K. S. வீதி,

கோண்டாவில் மேற்கு.

(சி- 9003)


## தொடர் நவீனம்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

நினைவில் எழுந்தன. இனிய நினைவுகள் எவ்வளவு ஆசைக் கனவுகள் கண்டார்கள். அவர்கள் கட்டிய மனக்கோட்டைகள்தான் எத்தனை?

எல்லாம இன்றுடன் சரி.

'எனக்குத் துணிச்சல் இல்லை. கோழைகள் காதலிக்கக்கூடாது'.

அவன் மண்டபத்தை விட்டு எழுந்து வீட்டிற்கு வந்தான். எவருக்கும் தெரியாமல் வந்து படுக்கையில் விழுந்தான் விழிகள் அழுதன. அப்படியே அதிகாலை அயர்ந்து உறங்கிப் போனான்.

அவன் தூக்கம்கலைந்தபோது யன்னலூடாக சூரிய கதிர்கள் உள்நுழைந்துஉறைத்தன. ஒன்பது மணியிருக்கும்....

அவன் எழுந்து வெளியில் வந்தான். முகம் வீங்கிருந்தது

சுவரோடு சாய்ந்திருந்த சின்னத்தங்கம் அவனைக் கண்டதும் பொருமிக்கொண்டு. ''அடபாவி உன்னால அந்தப் பொன்னம்மாவின பொடிச்சி மருந்து குடிச்சுச் செத்திட்டாளாம.'' என்று பெருங்குரலில் ஒப்பாரியிட அவன் அப்படியே உறைந்துபோனான்.

[தொடரும்]

## நோபல் பரிசை

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

பேராசிரியர் பி ஸி பி. பெர்ணண்டோ (ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) பேராசிரியர் தஹநாயக்கா.

பேராதனைப் பல்கலைக்கழக பௌதிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ஜோர்ச் திசாநாயக்கா.

மொரட்டுவ பல்கலைக்கழக பௌதிக எலக்ரோனிச்ஸ் துறைத் தலைவர் டாக்டர் திருமதி தயாவன்ஸ ஆகியோரும் யாழ்ப்பாணம் பலகலைக்கழகத்தின் பௌதிகவியற் துறைத்தலைவர்குணரட்ணமும் பேராசிரியர் மயில்வாகனம் அவர்களின் மாணாக்கர்களாவர்.

பேராசிரியர் மயில்வாகனம் அவர்களைப் பொதுமக்களிற் பலர் அறியாதிருக்கலாம் ஆனால் இலங்கையில் தனி ஒரு மனிதனாக பௌதிகக்கல்வியின் எழுச்சிக்கும் அக்கல்வியின் சிறப்புக்குமென உழைத்த அப்பெருமகனாரை அவரது மாணவர்கள் என்றும் நன்றி உணர்வுடனேயே நினைவுகூர்வார்கள்.

அவர்களில் இன்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பௌதிகத்துறைத் தலைவராக உள்ள நானும் ஒருவன் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி: ஐலண்ட்

தமிழில்: அனந்த்

## கார்ட்டுன் ஓவிய

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏராளமான கடிதங்கள் எழுதியிருந்தார்கள் பேருவளையிலிருந்து ஒருநேயர் ''சின்னக்குட்டி அவர்கள் நோய் சுகமாகி ஆஸ்பத்திரியிலிருந்து வெளியில் வந்த பின்பு ஈரலுக்குப்பாதகமான சாராயம்குடிக்கக்கூடாது நான் அவருக்கு ஆங்கில விஸ்கி வைன் பிறண்டி அனுப்பி வைபபேன் என வாஞ்சையாகக் கடிதம் எழுதியிருந்தார்.

(தொடரும்)

## நெல்லை க. பேரனின்

[8ம் பக்கத் தொடர்ச்சி]

வந்துள்ளன என்பது காரணமாகக் கவனிப்க்குள்ளாவன. மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்யும் தொழிலாளர் தமது முதலாளிக்கெதிராகக் கிளம்புவது பற்றியது,. 'சத்தியங்கள் திரும்போது' இத்தகைய சம்பவங்கள் அங்கு நடக்கக் கூடியனவா என்ற ஐயம் எழவே செய்கிறது. ஆங்கையரின் சாதியுணர்வு இங்கு வெளிப்படு செய்வதை 'மெல்ல இனிச்சாகும்' கூறமுயல்கிறது. அங்குள்ள தொழிலாளரின் வாழ்க்கை முறையினைக் கடிதத்தின் மூலம் - உண்மையாகவே கடிதம் போலும் - காட்டுவது அன்புள்ள எழுத்தாளருக்கு! என்ற கடிதக் கதையாகும்.

அண்மைக்கால யாழ்ப்பாணப் பிரச்னைகள் பற்றிய கதைகளுள், 'ஒரு பென்சன்காரர் பயணம் போகிறார்' இன்றைய கெடுபிடிகளின் மத்தியில் பென்சன் பணம் பெற யாழ்ப்பாணம் சல்லும் வயோதிபரின் கஷ்டங்கள் பலவற்றைக் கூறுவதாகும். ஷெல் தாக்குதல்களும், வாகனங்களின் உறுமலும் சிறு பிள்ளைகளின் உள்ளத்தில் எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லது என்பதைக் காட்டும் 'பிள்ளைகள்' இத் தொகுதியிலுள்ள பாராட்டத்தக்க சில சிறு கதைகளில் ஒன்றெனலாம்

சிறுகதைகளில் தலைப்புக்கள் கூட முக்கியமானவையாகும். இவ்விதத்திலும் இத் தொகுதிக் கதைகள் நிச்சயமான கவனிப்பை வேண்டி நிற்கின்றன. ''ஒரு'' எனத் தொடங்கும் ஆறு கதைகள் இத் தொகுதியிற் காணப்படுகின்றன இதனால் கதை கூறும் விடயம், உடன் விளங்கி விடுவது மட்டுமன்றி, கட்டுரைத் தன்மையுமல்லவா அமைந்து விடுகின்றது.


"ஷப்ரு"

யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட்

யாழ். அலுவலகம்

இடம் மாற்றம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

உங்கள் நலன் கருதி 'ஷப்ரு' நிதி நிறுவன அலுவலகத்தைப் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றியுள்ளோம்.

நீங்கள் குடாநாட்டின் எந்தப்பக்கத்திலிருந்து வருபவர்களாயிருந்தாலும் சரி எமது புதிய அலுவலகத்திற்குச் சிரமமின்றிப் பாதுகாப்பாகத் தயக்கமின்றி வந்துபோகலாம்.

ஆம், எமது அலுவலகம் நகரின் மத்தியில் பலாலி வீதியும் நாவலர் வீதியும் சந்திக்கும் இடத்தில் நாவலர் வீதி, 230 ஆம் இலக்கக் கட்டடத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

1. மானிப்பாய் வீதி மூலம் யாழ். நகர் வரும் வாடிக்கையாளர்கள் ஐந்து சந்தியில் இறங்கி நாவலர் வீதி ஊடாகவும்—
2. காங்கேசன்துறை வீதி ஊடாக யாழ். நகர் வரும் வாடிக்கையாளர்கள் மனோகராச் சந்தியில் இறங்கி நாவலர் வீதி ஊடாகவும்—
3. பலாலி வீதி மூலம் நகருக்கு வரும் வாடிக்கையாளர்கள் பலாலி வீதி—நாவலர் வீதி இலுப்பையடிச் சந்தியில் இறங்கியும்—
4. பருத்தித்துறை வீதி மூலம் யாழ் நகருக்கு வருவோர் ஆனைப்பந்தி ஊடாகவும்—
5. பிரதான வீதி மூலம் யாழ். நகர் வரும் வாடிக்கையாளர்கள் ஆரியகுளத்திலிருந்து பலாலி வீதி ஊடாகவும்—

புதிய அலுவலகத்திற்கு இலகுவாக வந்துசேரலாம்.

எமது புதிய அலுவலகம் எதிர்வரும் திங்கட்கிழமை (11-5-87) தொடக்கம் இயங்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

மூளாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சங்கானை, உடுவில், மானிப்பாய் பகுதி வாடிக்கையாளர்களின் நலன் கருதி மானிப்பாயில் உப அலுவலகம் ஒன்று விரைவில் திறக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

– பொது முகாமையாளர்,

ஷப்ரு நிதி நிறுவனம்.

(ஏ 3986)



சர்வதேச தொலைத்தொடர்பு கொள்ள விரும்புவோருக்கு

தினசரி 24 மணி சேவை

சர்வதேச தொலைபேசி

சர்வதேச ரெலக்ஸ்

உள்ளூர் தொலைபேசி

உள்ளூர் ரெலக்ஸ்

[ஏ 3859]

வெளிநாடுகளில் வாழும் உங்கள் உற்றார் உறவினர் நண்பர்களுடன் தொலைபேசியிலோ அல்லது ரெலக்சிலோ செய்திகள் பரிமாறுவதற்கு எங்களை நாடுங்கள்.

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

வவுனியா.

பகல் சேவை: இல. 2, கந்தசாமி கோவில் வீதி:
காலை ... 7-00 மாலை ... 5-00

இரவு சேவை: இல. 31, கதிரேசு வீதி,
மாலை ... 5-00 காலை 7-00

## 7-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
பத்மாவதி சவரிமுத்து
தாயின் மடியில்:
01-11-1934
இறைவனடியில்:
10-05-1980

பாசமாய் எமை
அணைத்த பத்மா
வதியே தாயே!
பண்பான குடும்பத்தின்
பதுமநிதியே
நேசமாய் நீசெய்த தியா
சங்கள் சேவைகள்
நெஞ்சம் மறக்காது,
நினைவுகள் நீங்காது
மோசங்கள் நடக்கின்ற
உலகமென்றே
பாசங்கள் தனை மறந்து
பரகதிசென்று
விட்டாய்
ஆண்டுகள் ஏழு கடந்தா
லும்
அம்மா உன் அன்பு மறப்
போமோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உங்கள் பிரிவால் துயருறும்: கணவன், மகன், மகள், தாய், சகோதரர்கள், பிள்ளைகள், மைத்துனர்கள்.

மானிப்பாய்.

(சி 8951)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஸ்ரீமான் அமரர்
வைத்திலிங்கம்
துரையப்பா
(துரையப்பா அடைவு கடை, 276.K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 10-8-1913
மறைவு: 4 - 5 - 1982
திதி: 10-05-1987

எமது குடும்பத்தின் ஒளியாய், பாசத்தின் உறைவிடமாய் இருந்து எம்மை அன்புடன் வளர்த்து அறிவுரைகள் பல நல்கி வாழவைத்த அன்புத் தெய்வமே! நீங்கள் அமரராகி ஆண்டு ஐந்து ஆகினும் உங்கள் நினைவு எங்களைவிட்டு அகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனைசெய்கிறோம். மனைவி, மகன், மருமகள், உறவினர்கள்.

98, முருகபவனம்,
பழைய வீதி,
இருபாலை.

[சி 8998]

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



சின்னத்தம்பி
இராஜரட்னம்
[வல்வெட்டி]
தோற்றம்: 31-10-1936
மறைவு: 07-04-1987

எமது குடும்பத்தின் வழிகாட்டியாகஇருந்து எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு பிரிந்துவிட்ட எமது குடும்பத்தலைவரின்ஆத்மாசாந்தி அடைய பிரார்த்திக்கிறோம். 7-5-87 அன்று நடைபெற்றஅன்னாரது அந்தியேட்டி வீட்டுக் கிரியைகளில் கலந்துகொண்டஉறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அன்பான எமது நன்றி.

அன்பு மனைவியும்
குடும்பத்தினரும்.
'கன்னிகாபவனம்'
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

சி-8803

## முக்கிய அறிவித்தல்
## மின் தடை

அநுராதபுரம்—சுன்னாகம் 132 கி. வோல்ட் மின்மார்க்கத்தில் உள்ள பழுதடைந்த மின்கோபுரத்தைத் திருத்தும் முகமாக 1987ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி தொடக்கம் 19ம் திகதி வரை தினசரி காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்சாரம் தடைப்படும். இதன் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேச மின் பொறியியலாளர்களுக்கு உட்பட்ட சகல பகுதிகளுக்கும் மின் தடைப்படும் என இத்தால் அறிவிக்கின்றோம். இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

மின் பொறியியலாளர்
யாழ் பிரதேசம்'
இலங்கை மின்சாரசபை'
சுன்னாகம்.
எ-3862

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



Dr. N. கோபாலபிள்ளை
L. M. S. (Singapore)
தாய்மடியில்: 17-04-1899
இறைவன் அடியில்:
10-05 1980

நெஞ்சழுத்தும் நினைவோடு வணங்கிடும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்- சித்திரா பேரின்பநாதன் [U. K], மீரா சேனாதிராஜா, K. பாலேந்திரன் [ஹரி], ஸ்ரேய் சங்கரநாராயணன் [ரஷ்யா], ஷேன் சங்கரநாராயணன்

43, 3ம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்

[சி 8997]

## தேவை

கிளிநொச்சியில் உள்ள கருணா நிலையத்திற்கு, தையல் கலை, மனையியல், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் கற்பித்து பிள்ளைகளை அன்புடன் பராமரிப்பதற்கு தியாகம், சேவை மனப்பாங்குகொண்ட பெண் ஊழியர் தேவை.


(G. C. E.) உயர்தரம் சித்தியடைந்தவர்களும் அல்லது விசேஷ தகைமைபெற்றவர்களும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். இருப்பிட வசதி உண்டு.


வண. சாம் டி. ஹொசிங்டன்,
மிசன் இல்லம்,
நல்லூர்.

(சி-8957)

## 2-வது ஆண்டு நிறைவின்
## கண்ணீர் அஞ்சலி

''சிவியத்தில் நேசித்தவர்களே
எம்மரணத்திலும் மறவாதீர்''





தே. வென்சிலாஸ் (குணம்) — தே. சவுந்தரநாயகம (குலசெல்வம்)

| 1956-09-28 | அன்னை மடியில் | 1967-08-16 |
|---|---|---|
| 1985-05-10 | இறைவன் அடியில் | 1985-05-10 |

கண் பொசுங்கி நீர்வழிய
கை விரல்கள் தலையழுத்த
கால மெல்லாம் காத்திருந்தும்
காரிருட்டாய் போன தெங்கே
குலத்தே உதித்த குலவிளக்குகளாம்
குணம் குல செல்வங்களை
அரக்கர் கூட்டமது
அநியாயமாய் கொன்றொழித்ததனை
எண்ணி அழும் நேரமெல்லாம்
எம் இதயம் பற்றிஎரிகிறதே

எமது செல்வங்களின் ஆத்ம இளைப்பாற்றிற்காக யாழ். புனித மரியாள் ஆலயத்தில் 11-05-87 திங்கட்கிழமை காலை 6-15ற்குப், பரு. தும்பளை புனித தேவமாதா ஆலயத்தில் மாலை 6-30ற்கும் நடைபெறும் திருப்பலிப்பூசையில் உற்றார், உறவினர், நண்பர்களை பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| வ. தேவசகாயம், | தாய், தந்தை, சகோதரர்கள், |
| 3-ம் குறுக்கு தெரு, | மைத்துனர், மைத்துனிமார், |
| பருத்தித்துறை. | மருமக்கள், (ச-8995) |

**லிடோ** யாழ். நகர்
10-30, 2-30, 6-30
சிவகுமார் -சுஹாஷினி
நடித்த
**சிந்து பைரவி**
1986ம் ஆண்டு இந்திய ஜனாதிபதியின் சிறந்தவிருதைப்பெற்ற படம் சங்கீத இசைப்பிரியர்களுக்கோர் சிறந்த வரப்பிரசாதம்.
[புதிய வெளியீடு கலர்]

புதிய வெளியீடு
**வெலிங்டன்** திரையில்
10-30, 2-30, 4-30, 6-30
நவீனரக ஆயுதங்களுடன் பயங்கர சண்டைகள் நிறைந்தது.
Anthony Quinn - James Corburn
Lindsay Wagner in
HIGH RISK
(Colour)

## இடமாற்றம்

வாடிக்கையாளரின் பாதுகாப்பை முன்னிட்டு
தற்காலிக இடமாற்றம்

''சீமாட்டி ஜவுளி சமுத்திரம்''
''சீமாட்டி பான்ஸி குட்ஸ்''

மலிவு விற்பனை:

**''சுமங்கலி''**
531, பலாலி வீதி,
[யாழ். பல்கலைக்கழகம் அருகாமையில்]
திருநெல்வேலி.

கிளை:- சுன்னாகம்.

[சி-8990]

யாழ். மக்களே!
உங்கள் கொழும்பு விஜயத்தின் பொழுது
தனியாகவோ அல்லது குடும்பமாகவோ தங்குவதற்கு சுகாதாரமானதும் பாதுகாப்பானதும் நம்பிக்கையானதுமான ஸ்தாபனம்

## ''ஹை ஸ்ரார் லொட்ஜ்''

வெள்ளவத்தை

அத்துடன் வெளிநாடுகளிலிருந்து உறவினர்களோ அல்லது நண்பர்களோ வர இருக்கிறார்களா? அல்லது நீங்கள் வெளிநாடு செல்ல இருக்கிறீர்களா கட்டுநாயக்கா விமான நிலைய போக்குவரத்து வசதிகள் உட்பட சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

எமது ''ஹோட்டல் நியூஹைஸ்ரார்'' ஸ்தாபனத்தில் V. J. S., SAFETY K. S. B., HOME FINANCE போன்ற கொழும்பு - யாழ். சொகுசு பஸ் சேவைகளிற்கும் ஆசனங்கள் பதிவு செய்யப்படும் எம்மிடம் கொள்வனவு செய்யப்படும் பிரயாணச் சீட்டுகளிற்கு கவர்ச்சிகரமான பரிசுத்திட்டம் ஒன்று எம்மால் பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களிற்கு

| | |
|---|---|
| ''ஹை ஸ்ரார் லொட்ஜ்'' | ''ஹோட்டல் நியூ ஹைஸ்ரார்'' |
| 41/2. W. A சில்வா மாவத்தை | 246 காலி வீதி, கொழும்பு - 6. |
| கொழும்பு - 6 தொலைபேசி இல. 500767 | (சி 9011) |

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

ஞாயிற்றுக்கிழமை 10-5-87

### உயர் மட்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த செவ்வாய்க்கிழமை கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமை முடிந்து திரும்பிய தமிழ் பொலிஸ்காரர் ஒருவர் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதால் அவர் படுகாயமடைந்தார். இதைத் தொடர்ந்து சகல தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொலிஸ் நிலையத்துக்கு கடமைக்குச் செல்வதை இடைநிறுத்தியுள்ளனர்.

### கோட்டை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி
த்துப் பேசவுமே இந்த தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாலர் கல்வி ஆசிரியர்க்கான 'புதிய பயிற்சி நெறி' ஒன்று யாழ். பல்கலைக்கழகமறுமலர்ச்சிக் கழகத்தால் நடாத்தப்பட உள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழக கட்டிடத்தில் நடைபெறும் இப்பயிற்சி நெறியில் யாழ். மாநகரசபைப் பகுதிக்குள் உள்ள அனைத்து பாலர் பாடசாலை ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### பொலிசாரால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இப்பாதிப்புக்களையடுத்து கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அவர் சிகிச்சை பெற்று வந்தார். தொடர்ந்து காலில்ஏற்பட்ட காயத்துக்குச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் வகையிலேயே அவர் சிங்கப்பூருக்குப் பயணமானார்.

காயமுற்ற டாக்டர் கொல்வின் ஜனாதிபதி, அமைச்சர்கள்: லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்கா ஆகியோர் சென்று வைத்தியசாலையில் பார்வையிட்டனர்.

ஸ்ரீ ல சு. க. தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் நேற்று முன்தினம் காலை மருத்துவ சிகிச்சையொன்றுக்காக யூகோஸ்லாவியா பயணமாகியுள்ளார்.

## யாழ். வந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
றன என்று தெரிவிக்கப்பட்டது.

சில பாதுகாப்புப் படைதடை முகாம்களில் யாழ். லொறிகளின் எண்ணெய்த் தாங்கிகள் பெரிதாக இருக்கும் பட்சத்தில் துவாரமிடப்பட்டும் சோதிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவுக்கு மீண்டும் அகதிகள்:

# காவலூரிலிருந்து 30 பேர் ராமேஸ்வரம் சென்றனர்!

சென்னை. மே 9


இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் தாக்குதல்களிலிருந்து தம்மைக் காப்பாற்றும் பொருட்டு ஊர்காவற்றுறையிலிருந்து30 தமிழ்அகதிகள் இந்தியா சென்றடைந்துள்ளனர்.

நேற்று ராமேஸ்வரத்தைச் சென்றடைந்த இவர்கள்,விமானக்குண்டு வீச்சுக்குப் பயந்து ஒருவாரம் காடுகளில் ஒளித்திருந்ததாகத் தெரிவித்தனர்.

இந்த 30 பேரில் 1 மாதக் குழந்தை உட்பட 9 பேர் பெண்களாவர்.

இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கையால் யாழ்ப்பாணத்தில் 5,000 பேர் தமது வீடுகளை இழந்துள்ளனர் என்றும் இவர்களும் இந்தியாவர விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களால் ஒரு லட்சத்து 25 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இந்தியாவில் தஞ்சமடைந்திருப்பதும், அண்மைக் காலமாக இவர்களில் பலர் நாடு திரும்ப ஆரம்பித்துள்ளதாகவும் இலங்கை அரசாங்கம் தெரிவித்திருப்பதும் தெரிந்ததே. [ஊ]




## மூன்று கப்பல்களில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]
இராணுவ தளபாடங்கள் மற்றும் உணவுப்பொருட்கள் கோட்டை இராணுவ முகாமிற்கு உடனுக்குடன் எடுத்து வரப்பட்டன.

நேற்றுக்காலை பாஷையூர் கடலினை வந்தடைந்த மூன்று கப்பல்களிலிருந்து இறக்கப்பட்ட பொருட்கள் சிறுத்தீவு ஊடாகப்படகுகளில் மண்டைதீவு முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டு மண்டைதீவு முகாமிலிருந்து பண்ணை வீதி வழியாக உடனுக்குடன் கோட்டை இராணுவ முகாமிற்கு ட்ரக்குகளிலும் கவசவாகனங்களிலும் கொண்டு செல்லப்பட்டன.

பொருட்கள், தளபாடங்களை இறக்கும் பணிஇடம் பெற்றுக் கொண்டிருந்த சமயத்திலேயே யாழ். நகரைச் சுற்றி நேற்று வட்டமிட்டு தாழப்பறந்து இரு ஹெலிகாப்டர்களிலிருந்து நகரின் பல பாகங்களையும் நோக்கி 50-ஹலிபர், மோட்டார் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதலினால் பலர் காயமடைந்தனர், சில வீடுகள் வர்த்தக நிலையங்கள் என்பன சேதமடைந்தன.

நேற்றுக்காலை ஒன்பதுமணியளவில் நகரைச்சுற்றி வட்டமிட்ட ஹெலிகாப்டரிலிருந்து ஏவப்பட்ட இரு ஷெல்கள் யாழ்ப்பாணம் சிவன்கோயிலருகில் வீழ்ந்து வெடித்ததினால் ஆசிரியர் ஒருவர் காயமடைந்தார். சிவன்கோயில் வடக்கு வீதியிலுள்ள சு. முத்துச்சாமி நாயுடு என்பவரின் வீடு சிறிது சேதமடைந்தது

சுமார் ஒரு மணித்தியாலம் நகரின் பல பாகங்களையும் சுற்றி இந்த ஹெலிகாப்டர் தாக்குதல் நடத்தியது.

தொடர்ந்து நண்பகல் பன்னிரண்டு மணியளவில் பலாலி முகாமிலிருந்து யாழ். நகரை நோக்கி வந்த இரு ஹெலிகாப்டர்கள் நகரைச் சுற்றி வேட்டுக்களைத் தீர்த்தன,

முஸ்லிம் வட்டாரத்தைச் சுற்றி இரு ஹெலிகாப்டர்களிலிருந்தும் நடத்தப்பட்ட தாக்குதலினால் அங்குள்ள பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூன்று முஸ்லிம்கள் காயமடைந்தனர்.

இத்தாக்குதலினால் இப்பள்ளிவாசலும் சிறிதுசேதமடைந்தது.

இங்கு தொழுகையிலீடுபட்டிருந்த முஸ்லிம் மக்கள் அல்லா......அல்லா எறைவாறு பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர்

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஒருவரான ஜனப் ஜீட்னுஸ் [21 வயது] என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹெலிகாப்டரிலிருந்து ஏவப்பட்ட 'ஷெல்' ஒன்று யாழ். ஆஸ்பத்திரியின் அருகே வீழ்ந்து பாரிய சத்தத்துடன் வெடித்தமையால் யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்களிடையே பதற்றம் ஏற்பட்டது. [ஒ]

## 18 தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
புச் சம்பவங்களையடுத்து தென்னிலங்கையில் சூழ்நிலை அபாயகரமாகியுள்ளதென்றும், மேலும் தாக்குதல்கள் நடைபெறலாமென தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் திரு. ஆர்ப்ன்ஸ் செய்தியாளரிடையே மேலும் தெரிவித்துள்ளார். (ஊ]

## மீண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யொன்று தெரிவிக்கின்றது. அதேநேரம் வடக்கு,கிழக்கில் ராணுவ நடவடிக்கைகள் தொடருமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி யூ என் ஐ. மேலும் தெரிவித்திருப்பதாவது தமிழ்ப்போராளிகள் இனப்பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணுவதில் ஆர்வமில்லாமல் இருப்பதாக இலங்கை அரசாங்கம் கருதுவதனாலேயே இம்மாநாட்டை நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும், இதற்கு அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளும், பேச்சுவார்த்தையில் அக்கறையுள்ள தமிழர் அமைப்புகளும்அழைக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதம் 12ம் திகதி ஜனாதிபதியினால் கூட்டப்பட்ட இம்மாநாடு மீண்டும் ஜூலை மாதம் 23ம் திகதி நடைபெற்றபின் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டதும் சுதந்திரக்கட்சியைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் இதில் பங்கு பற்றியதும் தெரிந்ததே. (ஊ)

## யாழ். ஆஸ்பத்திரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சாலையை மூடுவதனால் ஏற்படும் பாதிப்புக்கள், கஷ்டங்கள் குறித்து யாழ். தூதுக்குழுவினர் பல்வேறு கோணங்களிலிருந்தும் அமைச்சருக்கு விளக்கமளித்தனர்.

இதனையடுத்தே அமைச்சர் லலித் அத்துலத் முதலி சமாதானப் பிராந்தியம் பற்றிய திட்டத்தை அக்குழுவிடம் வெளியிட்டார்.

''மூன்று மாதங்களுக்கு முன்னரே அரசு இத்திட்டத்தை முன்வைக்கத் தயாரானபோதிலும் போராளிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை'' என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும், தற்போது அதற்கான சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும் யாழ். ஆஸ்பத்திரியையும், மற்றும் நகரின் ஏனைய சனநடமாட்டப் பகுதிகளையும் பாதுகாக்கும் வகையில் சமாதானப் பிராந்தியமொன்றை யாழ். நகரில் ஏற்படுத்த தாம் முன்வந்திருப்பதாகவும் கூறினார்.

தொடர்ந்து அவர் சமாதானப் பிராந்தியம் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் கோட்டை இராணுவம் கோட்டைக்கு வெளியே தாக்குதலை மேற்கொள்ளமாட்டாது என்றும், போராளிக்குழுக்களும் கோட்டை மீது தாக்குதலை நடத்துவதை நிறுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார். இது குறித்து போராளிகள் குழுக்களை உடன்படச் செய்யும் பேச்சுக்களையும் மேற்கொள்ள உதவுமாறு தம்மைச் சந்தித்த குழுவினரை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இது குறித்து போராளிகளுடன் பேச்சு நடத்த காப்டன் கொத்தலாவலவும் கோட்டை முகாமுக்கு விசேடமாக அனுப்பிவைக்கப் பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

போராளிக் குழுக்களையும் இவருடன் நாளை திங்கட்கிழமை சமாதானப் பிராந்தியம் குறித்துப் பேச ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரைச் சந்தித்த குழுவினர் தெரிவித்தனர்.

யாழ். வைத்தியசாலையில் நேற்றுமாலை மேற்படி விடயங்கள் தொடர்பாக யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் பத்திரிகையாளர் மகாநாடொன்றை நடத்தினார்.

இம்மகாநாட்டில் டாக்டர் ஜெகாபசுபதி, டாக்டர் சிவகுமார், டாக்டர் திருமதி பசுபதி, டாக்டர் பீ. ஆர் சீர்மறன், டாக்டர் எம். கணேசரட்ணம், டாக்டர் பி. எம். ஈஸ்வரராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மரண அறிவித்தல்

### சபாபதி நாகராசா (நாகேந்திரம்)

சங்கானை மர அரிவுத்தொழிற்சாலை உரிமையாளர் சபாபதி நாகராசா (நாகேந்திரம்) ஆச்சாரியார் 9-5-87ல் காலமாகிவிட்டார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கனகசபாபதி (சவுதி), கனகலிங்கம், சியாமளா, சசிகலா, சந்திரகலா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 9-5-87 சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு சங்கானை விழாவெளி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்; திருமதி சிவபாக்கியம் நாகராசா (மனைவி)
சி- 9005)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மே மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/ /81 Eelanadu. P. O. Box Telegram, Eelanadu. Telephone: — 22389 24126.

## மரண அறிவித்தல்

### கோசலா

செல்வி கோசலாதேவி சின்னத்துரை தாவடி குடும்பநல சேவையாளர் 4-5-1987 அன்று நெடுந்தீவில் காலமானார். அவரின் இறுதிக் கிரியைகள் 5-5-87 அன்று நெடுந்தீவில் நடைபெற்றது. நண்பர்கள், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: எஸ். பாலசிங்கம், கோண்டாவில் மேற்கு.
(சி- 9015)